
பக்கங்கள்-16 | 27.கார்த்திகை.2022 | விலை–50.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –391

## நவம்பர் 27 மாவீரர் தினமும் அரசாங்கத்தின் தடையும்



## ஜனாதிபதி ரணில் மக்களின் ஆணையைப் பெற்ற தலைவர் அல்ல – பா. அரியநேத்திரன்

## வவுனியாவில் "போதைமாத்திரை" விநியோகம் மருத்துவர் நிரபராதியா?

## சட்டத்துறை இதுவரை சாதித்தது என்ன? – விளக்குகிறார் க.வி.விக்னேஸ்வரன்

# நவம்பர் 27 மாவீரர் தினமும் அரசாங்கத்தின் தடையும்



நவம்பர் மாதம் என்றால் அது தமிழ் இனத்துக்கு மறக்க முடியாத ஒரு மாதமாக இருக்கின்றது. ஏனென்றால் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினம். 26 ஆம் திகதி தேசியத்தலைவர் பிரபாகரனுடைய பிறந்த தினம். உண்மையிலே நவம்பர் மாதத்திலே பிறந்த பலரும் சாதனைக்குரியவர்களாகத்தான் இருக்கின்றார்கள். நவம்பர் 27 என்னும் பொழுது இந்த அரசாங்கத்தை பொறுத்தவரையிலே நல்லாட்சி அரசாங்கம் இருந்த கட்டத்திலே மாவீரர்களுக்கான அஞ்சலி செலுத்துவதற்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்குமான அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் தற்பொழுது மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளை கட்சி சார்ந்து நடத்தக்கூடாது என்றும் பொது மக்கள் அதனை ஒன்றுகூடி பெருவாரியாக செய்யக்கூடாது என்ற நிபந்தனையும் தற்பொழுது அரசாங்கத்தால் விடுக்கப்பட்டிருக்கின்றது. ஒட்டுமொத்தத்திலே மாவீரர் தினம் அனுஷ்டிக்க கூடாது என்பதே அவர்களுடைய நிலைப்பாடாக இருக்கின்றது.

இவ்வாறிருக்கும் பொழுது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் போராளிகள் இந்த நாட்டிற்காக போராடி வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற நோக்கில் பயணித்து தங்களது உயிர்களையும் இழந்துள்ளார்கள். உண்மையில் அவர்கள் நினைவுகூற வேண்டியவர்கள் தான். தமிழர்கள் என்ற வகையில் நாங்கள் அதனை கூறுவதற்கு பயந்து அல்லது வெட்கி தலைகுனிய வேண்டியதில்லை. ஏனென்றால் கடந்த காலங்களிலே சிங்களவர்களுக்கு மத்தியிலும் கூட ஜே.வி.பியினர் ஒரு பயங்கரவாத செயலில் ஈடுபட்டார்கள். அவர்கள் கடந்த காலங்களிலே சிங்கள குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தார்கள்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்தவரையிலும் ஒரு இனத்தின் விடுதலைக்காக இறுதிவரை இந்த அரசாங்கம் அவர்களை பயங்கரவாதிகள் என தடை செய்து சர்வதேச ரீதியில் இந்த போராட்டம் மௌனிக்கப்படும் வரையும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு தமிழ் இனத்துக்காக போராடினார்கள் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை. அதிலே பல்வேறு பிரச்சனைகள் வரலாம்.

உண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பானது தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டதொன்று. அதில் ஊடகவியலாளர் சிவராம் அவர்கள் முன்னின்று உழைத்தவர். அதன் பயனாக தற்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பும் கூட இந்த மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க கூடாது என்பதிலே அரசாங்கம் உறுதியாக நிற்கின்றது. இந்த மாவீரர் தினம் ஏன் அனுஷ்டிக்கப்பட வேண்டும் அல்லது இதனை ஏன் நினைவுகூற வேண்டும் என்று பார்க்கும் பொழுது ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடியவர்கள் நினைவுகூறப்பட வேண்டியவர்கள் மாற்று இயக்கங்கள் அவர்கள் தங்களுடைய பிரதேசங்களிலே நினைவுகூறுவதற்கான அனுமதிகள் இருக்கின்ற பொழுது ஒரு இனத்தின் விடுதலைக்காக அயராது இரவு பகலாக பல களப்போர்களை கண்டவர்கள் மரபுவழி ரீதியாக கடல் வான் தரை என சாதனையை படைத்து போராளிகள் வெற்றிக்கான பகுதிகளில் முன்நின்று உழைத்தவர்கள்.

குறிப்பாக வடகிழக்கு தமிழர் தாயகத்தை எடுத்துக்கொண்டால் குறித்த பிரதேசத்திலே இராணுவத்தரப்பு அல்லது இந்த இலங்கை அரசாங்கம் ஒரு வெற்றியை கூட குவிக்கவில்லை என்பது நிதர்சனமான உண்மை. ஆகாய கடல்வழிச் சமராக இருக்கலாம் அல்லது கட்டைக்காட்டு சமராக இருக்கலாம் முல்லைத்தீவு சமராக இருக்கலாம். கிழக்கு மாகாணத்தில் அம்பாறையில் இடம்பெற்ற மோதல்கள் இப்படியெல்லாம் அடுக்கிக்கொண்டே செல்லலாம். 30 ஆண்டுகால வரலாற்றிலே தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போராடி ஒரு இடத்தையேனும் அவர்கள் பிடிக்கவுமில்லை அல்லது அவர்கள் கணிசமான இழப்புக்களுடன் மீளவும் தங்களுடைய நிலைக்கு திரும்பினார்கள் என்பது தான் வரலாறு கடந்த உண்மை.

ஜேசிக்குரு இராணுவ நடவடிக்கையை கூட பல வருடங்களாக நடந்த சண்டையை ஒரு மாதத்திலே தமிழீழ விடுதலைப்புலிகள் நகர்த்தி வவுனியா ஜோசப் காம் வரை கொண்டுவந்த வரலாறுகள் இருக்கின்றது. அதற்கு சாட்சியாக தற்பொழுது இருக்கக்கூடிய தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணாவிடம் கேட்டுப்பார்க்கலாம். தமிழீழ விடுதலைப்புலிகளின் சாதனை அவர்களின் மரபுவழி போராட்டங்கள் எவ்வாறானது என்பது பற்றி அவரிடம் கேட்டுக்கொள்ளலாம்.

எனவே ஜே.வி.பியினர்கள் நினைவுகூற முடியுமாக இருந்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் உண்மையிலே நினைவுகூறப்பட வேண்டியவர்கள். ஏனென்றால் இவர்கள் 2004 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு இராணுவத்தினருக்கு கைகொடுத்தார்கள் இராணுவத்தினருடன் இருந்து ஒன்றாக சாப்பிட்டார்கள் அரச உயர் அதிகாரிகளுடன் இருந்து கைலா கொடுத்தார்கள். பேச்சுவார்த்தை மேசைக்கு சென்றார்கள் உள்ளூர் பேச்சுவார்த்தைகளாக 14 கட்ட பேச்சுக்களும் வெளியூர் பேச்சுவார்த்தைகளாக 7 கட்ட பேச்சுவாரத்தைகளும் ஒஸ்லோவில் ஜெனீவாவில் எல்லாம் இடம்பெற்றது. இந்த பேச்சுவார்த்தைகளில் எல்லாம் இவர்கள் கலந்துகொண்டார்கள்.

எனவே இதுவொரு சர்வதேச ரீதியான பிரச்சனை என்பதற்காக இந்தியாவினுடைய கூமாங்குல அணுலை பாரிய சேதம் ஏற்படும். அல்லது அதனை கரும்புலிகள் கொண்டு தாக்குவார்கள் என்ற காரணத்தினாலும் அதுமட்டுமன்றி அமெரிக்கா தனது பிராந்திய வல்லரசை இந்த நாட்டுக்குள் கொண்டுவர முடியாது என்ற காரணத்தினாலும் சீனா தனது கடல் பரப்பினூடாக இலங்கைக்கு வரமுடியாது என்ற காரணத்தினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளை உலக நாடுகள் இணைந்து பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி அவர்கள் மீது தாக்குதல்களை தொடங்கி இறுதியாக 2009 ஆம் ஆண்டு இந்த போர் மௌனிக்கப்பட்டது. அதிலே பல போராளிகள் இந்த மண்ணிற்காக இன்னுயிர் தியாகம் செய்திருக்கின்றார்கள் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை. ஆகவே இந்த போராளிகள் நினைவுகூறப்பட வேண்டியவர்கள்.

உண்மையில் அந்தந்த குடும்பங்களில் இருக்கக்கூடியவர்கள் ஆங்காங்கே அவர்கள் நினைவு கூறலை அனுஷ்டிக்கக்கூடியதொரு சூழல் தான் தற்பொழுது இருக்கின்றது. பொது இடங்களிலே மாவீரர் தின உரை அல்லது மாவீரர்களின் நினைவேந்தலை அனுஷ்டிப்பதெல்லாம் தடை செய்யும் முகமாக இராணுவத்தினர்கள் குவிக்கப்பட்டு பாரிய ரோந்து நடவடிக்கைகளில் கூட ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். மாவீரர் தினத்தை இனிவரும் காலங்களில் கூட இவர்கள் உச்சரிக்கக்கூடாது என்ற பலத்த நடவடிக்கைகளையும் கூட இந்த அரசாங்கம் தற்பொழுது ஏற்படுத்தியிருக்கின்றது.

**”இந்த தாயக பூமியிலே நான் இறந்தாலும் கூட அவர்கள் வாழ்வார்கள் சுதந்திரமான சுவாச காற்றை சுவாசிப்பார்கள் என தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலின் கீழ் இந்த தமிழீழம் என்றோ ஒரு நாள் வளரும் என்ற உறதியுடன் தான் அவர்கள் சைனட் வில்லைகளை அருந்தினார்கள்.”**

மாவீரர்கள் நினைவுகூறப்பட வேண்டியவர்கள் அவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியும் என்பதனை வெளிநாடுகளில் கூட இன்று பல நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன . எனவே இலங்கையிலே இவர்கள் இவ்வாறானதொரு மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க கூடாது என்ற திணிப்பை திணிப்பதின் காரணமாக ஒரு வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்பட வேண்டும் அல்லது நீங்கள் உருவாக்கியே தீருங்கள் என்று கூறுவது போன்று இவர்களின் நடவடிக்கைகள் இருக்கின்றன.

ஆகவே இந்த அரசாங்கம் அல்லது இனி வரும் அரசாங்கங்களாக இருந்தாலும் இதனை புரிந்துகொள்ள வேண்டும். இது தமிழ் மக்களின் போராட்டம் தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் வேறு அல்ல. இதற்கு முன்னர் பல ஆயுதப் போராட்ட கட்சிகள் இருந்தன. அவர்கள் இராணுவத்தினருடன் இணைந்து கைக்கூலிகளாக செயற்பட்டதன் ஊடாக இந்த தமிழீழ கனவு இலக்கை அடைய முடியாது போனது. ஆனால் இறுதிவரை தமிழீழ விடுதலைப்புலிகள் களத்தில் நின்று போராடினார்கள் அதனுடைய பயனாக இன்று சர்வதேச ரீதியாக தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய அபார வளர்ச்சி இன்னும் சில வருடங்களின் பின் இலங்கையிலே வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை உருவாக்குவதற்கு அகிம்சை ரீதியிலான நடவடிக்கைகள் அது சரியாக அமையப்பெறும் என்பதிலும் கூட மாற்றுக்கருத்தில்லை. இன்று அரசாங்கம் டயஸ்போராவிடம். அதாவது புலம் பெயர் தமிழர்களிடம் கையேந்துகின்ற அளவிற்கு நிலைமை மாற்றப்பட்டிருக்கின்றது என்பதிலே மாற்றுக்கருத்தில்லை என்று தான் கூற வேண்டும்.

எனவே அரசாங்கத்தை பொறுத்தவரையிலே பொதுமக்களை அஞ்சலிசெலுத்துவதும் அல்லது மாவீர்களுக்காக அஞ்சலி செலுத்துவதையும் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். அதனை தடை செய்யக்கூடாது ஏனென்றால் அவ்வாறு தடை செய்கின்ற பொழுது தான் அந்த தடைகளை உடைத்தெறிந்து வரவேண்டும் என பலர் எத்தணிப்பார்கள். அப்படியென்றால் ஜே.வி.பியினர் கூட அவர்கள் நினைவுகூறப்படத்தக்கவர்களும் அல்ல. அவர்களுடைய போராட்டம் வேறு தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் வேறு இதுவரையிலே பல தளபதிகள் போராளிகள் மேஜர் தளத்தில் உள்ளவர்கள் கெப்டன் போன்ற பலர் வீரச்சாவை தழுவியிருக்கின்றார்கள் கரும்புலிகளும் அதற்குள் உள்ளடக்கப்படுவார்கள்.

அவர்களுடைய கனவு எல்லாம் எனது சகோதரர்கள் எனது உறவுகள் எல்லாம் நிம்மதியாக இந்த தாயக பூமியிலே நான் இறந்தாலும் கூட அவர்கள் வாழ்வார்கள் சுதந்திரமான சுவாச காற்றை சுவாசிப்பார்கள் என தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலின் கீழ் இந்த தமிழீழம் என்றோ ஒரு நாள் வளரும் என்ற உறதியுடன் தான் அவர்கள் சைனட் வில்லைகளை அருந்தினார்கள். அவர்கள் எந்தவித ஊதியமுமின்றி இந்த மண்ணிற்காக போராடி மடிந்தும் போயிருக்கின்றார்கள் என்பதிலே மாற்றுக்கருத்தில்லை. அவர்களுடைய தியாகங்கள் உண்மையிலே போற்றப்பட வேண்டிவை அவர்களின் தியாகங்களும் அளப்பறியது.

ஆகவே அவர்களை நினைவுகூறுவதற்கு இந்த அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கினாலும் வழங்காவிட்டாலும் நிச்சயமாக மாவீரர்கள் தமிழ் மக்கள் மனதில் என்றும் இடம்பிடித்திருக்கின்றார்கள் அவர்களின் வீடுகளில் அஞ்சலி செலுத்துவதற்கான அல்லது மறைவிடங்களில் இருந்துகூட அஞ்சலி செலுத்துவதற்கான நடவடிக்கைகளில் மக்கள் தற்பொழுது ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

நல்லாட்சியில் இருக்கின்ற பொழுது இதேரணில் விக்ரமசிங்க அவர்கள் மைத்திரிபால சிறிசேன அவர்கள் இருந்த பொழுதிலும் இந்த மாவீரர் நிகழ்வுகள் அனுஷ்டிப்பதற்கு அனுமதிகள் வழங்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் இந்த அனுமதிகள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படுகின்ற பொழுது தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கிடையில் நெருங்கிய உறவு ஏற்பட்டு உண்மையில் இந்த நாடு ஒரு சுபீட்சமான நிலையை பொருளாதார ரீதியிலும் எட்ட முடியும் என்பதனையும் கூறிக்கொள்கின்றேன்.

**-கூழியோடி-**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## தொடர்ந்தும் அடக்குமுறைக்குள் தமிழினம்

யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களைக் கடந்துள்ளபோதிலும் தமிழினத்தின் மீதான அரசின் அடக்குமுறைகளில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை. காணி அபகரிப்பும், பௌத்த மயமாக்கலும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், மத வழிபாட்டுத் தலங்கள் மீதான ஆக்கிரமிப்பும் இன்னும் தொடர்கின்றது. வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்கின்ற தமிழ் மக்களின் போராட்டங்கள் இன்று ஜனநாயக வழியில் இடம்பெறுகின்றது.

இனப்படுகொலைக்கான நீதி மற்றும் காணாமல் போனவர்களுக்கான தீர்வு குறித்து இன்றும் அரசிடம் கேள்வி எழுப்பப்படுகின்றது. வருடங்கள் கடக்கின்றபோதிலும் அரசு மரண சான்றிதழ் வழங்குவதில் தான் குறியாகவிருக்கிறதே தவிர, பொறுப்புக்கூறலில் இருந்து விலகியிருக்கிறது. சர்வதேச சமூகமும் அரசின் இச் செயற்பாடுகள் குறித்து கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றது.

தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய விடுதலைப் புலிகள் அமைப்பை தடைசெய்த பயங்கரவாத அமைப்பாக இலங்கை அரசு முத்திரை குத்தியுள்ளது. அவர்களை நினைவுகூர்வதை அரசு எதிர்க்கின்றது. மீறி அஞ்சலி செலுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுகின்றார்கள். பொலிஸ் மற்றும் இராணுவத்தின் அராஜக செயற்பாடுகள் தொடர்ச்சியாக வடக்கு மற்றும் கிழக்கில் பதிவாகிறது.

யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதுவொரு திட்டமிட்ட செயற்பாடே என்று கூறுபவர்களும் உண்டு. இளைஞர் மற்றும் யுவதிகள் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். பாடசாலை மாணவர்களும் போதைப்பொருள் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். தமிழினத்தின் கல்விச் செயற்பாடுகள் எதிர்காலத்தில் சிதைவடைந்து போக வாய்ப்பும் உள்ளது. வடக்கில் - கிழக்கில் வேறெந்த மாவட்டங்களில் இல்லாதவாறு முப்படைகளும் குவிக்கப்பட்டுள்ள சூழலில் எவ்வாறு இந்தப் போதைப்பொருள் பாவனை அதிகரித்தது என்கிற கேள்வி எழுகின்றது.

யுத்தத்தில் உயிர்நீத்த பொதுமக்களுக்கும் அஞ்சலி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. மாவீரர்களுக்கும் அஞ்சலி செய்ய முடியாது. இவ் நெருக்கடியான சூழலில் துயிலுமில்லங்கள் துப்புரவுப் பணிகள் செய்யப்படுகின்ற போதும் பொலிசாரின் தலையீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த நல்லாட்சியில் ரணில் - மைத்திரி அரசு தமிழ் மக்களின் ஆதரவால் பதவிக்கு வந்து அஞ்சலி நிகழ்வுகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்கியபோதிலும், இன்று ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அவர்களால் மாவீரர் மற்றும் பொதுமக்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளுக்கு உத்தியோகபூர்வமாக அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை. மீறிச் செயற்படுபவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்கிற விடயம் உறுதிபடத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்று தனக்குத் தேவையாக இருந்த தமிழ் மக்கள் இன்று தமக்குத் தேவையில்லை என்கிற நிலை வந்துள்ளது. பெரும்பான்மைச் சிங்கள மக்களால் தாம் பதவிக்கு வரமுடியும் என்பதை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிரூபித்துள்ளார். ஆனால் இவர்கள் நம்பியிருக்கும் இந்த விடயத்தினை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தென்னிலங்கையின் ராஜபக்ஷக்கள் மாத்திரமல்ல அனைவரும் சிங்கள மக்களால் ஓரங்கட்டப்பட்டுள்ளார்கள். நாட்டு மக்கள் இன்று அதிருப்தியடைந்துள்ளனர். இன்றைய தலைமுறையினர் சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமைகளை உணர்ந்துள்ளனர். இனப்பிரச்சினைக்கானத் தீர்வினை வழங்காமல் தென்னிலங்கை அரசியல்வாதிகளால் இந்நாட்டினை பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீட்க முடியாது. தொடர்ச்சியான அடக்குமுறைகள் நாட்டினை சீரழிக்கும் என்பதை இந்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணர்ந்து செயற்படுவது எப்போது?

# 196 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



கிட்டத்தட்ட 900 ரவைகள் அக்குழுவை நோக்கிச் சுடப்பட்டிருந்தது. அதாவது கொல்லப்பட்ட ஒரு முஜாகுதீனுக்காக 100 ரவைகள் செலவாகியிருந்தன. எமது தரப்பில் ஒரு வருடத்திற்குக் குறையாமல் சமரிட்ட, நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட வீரர்கள் சமர் புரிந்தார்கள். அத்துடன் நான்கு நன்றாகத் தயார்ப்படுத்தப்பட்ட அதிகாரிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

குறைந்ததுஒருதடவையேனும்உண்மையான சமர் இறுக்கத்திற்குள் இருந்தவன் மாத்திரமே என்னைப் புரிந்துகொள்வான். பயிற்சி இலக்குகள் மீது சகல பயிற்சிச் சூடுகளையும் மிகத்தரமாக நிறைவேற்றலாம். ஆனால் எங்களது உளவியல் நெருக்கத்தைக் கடந்து உண்மையில்ஆயுதந்தரித்தஎதிரியைநோக்கிக் குறிபொருத்திய சூட்டை மேற்கொள்வதென்பது மிகவும் கடினமானதாகும். விசித்திரமாக இருக்கலாம். ஆனால் சூட்டாயுதங்களுக்கான வெடிபொருட் செலவு ஒரு கொல்லப்பட்ட எதிரிக்காக 100 ரவைகள் என்ற செலவு சகல சமரைப் பொறுத்தவரையிலும் கிட்டத்தட்ட பொருத்தமானதாகவே இருக்கின்றது. எடுத்துக்காட்டாக முதலாம் உலகப்போரின் போது கிழக்குப் போரரங்கில் ரசிய இராணுவத்திற்கு மாதமொன்றிற்குத் தேவையான ரவைகள் 250 மில்லியன்களாக இருந்தன. இவ்வாறாக கொல்லப்பட்ட அல்லது காயத்தால் இறந்த (கிட்டத்தட்ட எட்டு இலட்சம் பேர்) எதிரியில் ஒவ்வொருவனுக்காகவும் பன்னிரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ரவைகள் சுடப்பட்டுள்ளன. ஆட்டிலறியின் கணக்கையும் சேர்த்துக் கொண்டால் இறந்த படைகளில் அரைவாசிப்பேருக்கான பொறுப்பை ஆட்டிலறி எடுத்துக்கொள்ளுமானால் ஒரு கொல்லப்பட்ட எதிரிக்காகச் செலவழிக்கப்பட்ட சூட்டாயுதங்களது வெடிபொருட்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 25 ஆயிரம் ரவைகளாகும்.

இவ்வாறான சூழ்நிலையில் மிகவும் வெற்றிகரமான சூடாகப் பதுங்கிச் சுடுகலனாளனின் சூடே (எவ்வளவு தூரத்திலிருந்து சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதைக் கருத்திலெடுக்காமல்) கருதப்படுகின்றது. கிட்டத்தட்ட மூன்றாண்டு காலமாக வெவ்வேறு சமர்களில் பங்கெடுத்த இந்தப் பகுதியின் ஆசிரியருக்கு உண்மையான பதுங்கிச் சூட்டை (600 மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திலிருந்து) மேற்கொள்ளும் சந்தர்ப்பம் எட்டவில்லை. எங்களாலும் எங்களை நோக்கியும் சூட்டாயுதங்களால் மேற்கொள்ளப்பட்ட சகல சூட்டுத் தாக்குதல்களும் குத்துவாள் சூட்டு முறையிலேயே மேற்கொள்ளப்பட்டன. அதாவது 100 - 150 மீற்றர் தொலைவிலிருந்தாகும். சுடுகலன்களின் வகைகளைப் பற்றிப் பார்ப்போமானால் மிகவும் வினைத்திறன் மிக்கதான பிஸ்ரல் சூடுகள் உறுதிப்படுத்தலிக்காக மாத்திரம் 3 - 5 மீற்றரிற்குட்பட்ட தூரத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டன. தன்னியக்கச் சுடுகலன் - 150 - 200 மீற்றர் டிரகுனோவ் பதுங்கிச் சுடுகலன் மற்றும் இயந்திரச் சுடுகலன் - 300 மீற்றர் வரையுமாகும். இதனைப் பற்றி வியட்நாமில் அமெரிக்கர்களது அனுபவங்களிலும் குறிப்பிடப்படுகின்றது.

அதற்காக சமரில் பதுங்கிச் சுடுபவனின் முக்கித்துவத்தை நான் மறுக்கின்றேன் என ஒருபோதும் எண்ணிவிடாதீர்கள். அப்படியல்ல, எதிரியை விழுத்துகின்ற தரமான சூடு எப்பொழுதும் உயர்தர நிபுணத்துவத்திற்கான அறிகுறியாகவே கருதப்பட்டது. 1985 ஆம் ஆண்டு செப்டெம்பரில் பூலி - கும்றிக்கு மேற்கேயுள்ள தகனாயி - கோரி என்ற பிரதேசத்தில் திறம்படச் சூட்டுநிலையைத் தெரிவுசெய்த இரு முஜாகுதீன்கள் மாத்திரம் 149 ஆவது டிவிசனின் இரண்டு பற்றாலியன்களை அரை நாளாகத் தடுத்துவைத்திருந்தனர். இது எமது படைகள் இரண்டு பி.எம்.பி - 2 கவசவாகனத்தில் மலைக்குச் சென்று அதனது தன்னியக்கச் சூட்டுப் பீரங்கியால் அவர்கள் இருந்த இடத்திலுள்ள பாறைகள் முழுவதையும் சுட்டுத்தள்ளும் வரை தொடர்ந்தது.

எமது இராணுவ அறிமுறைவாதிகளின் தவறு யாதெனில் ஓர் இராணுவத்துறைசார் நிபுணனான பதுங்கிச் சுடுபவனை அவர்கள் தரைப் படைப்பிரிவுகளுக்கான சகல சூட்டுத் தயார்ப்படுத்தல் தொகுதிக்குள் உள்ளடக்கிப் பார்க்கின்றனர். வழக்கமாகப் பிளாட்டூன் கட்டளையாளன், தான் எடுக்கும்போது தனது கையில் கிடைக்கின்ற ஆயுதத்தைத் தன்னிடம் வந்துசேர்கின்ற புதிய போர்வீரனிடம் கொடுக்கின்றான். ஆயுதத்தின் இலக்கத்தை அவனது இராணுவப் பதிவேட்டில் பதிவு செய்கின்றான். அன்றிலிருந்து பதுங்கிச் சுடுகலனைப் பெற்றுக்கொண்ட அந்தப் பாவப்பட்டவன் பதுங்கிச் சுடுகலனாளன் என அழைக்கப்படுகின்றான்.

உலகிலுள்ள கூடுதலான இராணுவங்களிலோ பதுங்கிச் சுடுகலனாளர்களைச் சிறப்புப் பயிற்சி முகாங்களில் மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் வரையான காலப் பகுதியில் தயார்ப்படுத்துகின்றனர். ஆட்தேர்வு போட்டி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது 20 - 30 வரையான தோற்றுநர்களில் மிகவும் சிறந்த ஒருவன் மாத்திரமே எஞ்சுகின்றான்.

உண்மையில் எங்களது படைப்பிரிவுகள் பதுங்கிச் சுடுகலனாளர்களைப் பெற்றுக்கொள்ளவில்லை. சோவியத் ரசியாவினதும் ஏன் ரசியாவினதும் இராணுவம் பங்கெடுத்த அண்மைக்கால உள்நாட்டுப் போர் அனுபவங்கள் தெரிவிப்பது யாதெனில் ஆட்தெரிவிலும் நிபுணர்களைத் தயார்ப்படுத்துவதிலும் போதியளவு அக்கறையற்ற தொழில்சார் அணுகுமுறை பதுங்கிச் சுடுகலனாளர் அமைப்பை உருவாக்கின்ற சகல முயற்சிகளையும் தோல்வியடைச் செய்துள்ளது.

எங்களிடம் பயன்பாட்டிலிருக்கின்ற சகல சூட்டாயுதங்களினதும் குறிகாட்டிகள்யாவிலும் முக்கிய கட்டுமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய தேவையிருக்கின்றது. பகலில் அவை இலக்கை நோக்கிச் சரியாகச் சுடுகலனைக் குறிபொருந்திச் சுட உதவுகின்றதென்றால் கும்மிருட்டிலும் இரவிலும் சூட்டின் வினைத்திறன் பூச்சியம் வரை குறைக்கப்படுகின்றது. பல்வேறு வகையான நெருப்புகள் ஒளியூட்டல் குண்டுகள், எறிகணைகள், மோட்டார்கள், ஏவுகணைகள் போன்றன இரவுப் பார்வைச் சாதனங்களைப் பாழாக்கிவிடுகின்றதோடு அவற்றின் வினைத்திறன் மிக்க பயன்பாட்டையும் சீர்கெடச் செய்கின்றன. இரவுச் சூட்டிற்காகக் குறிகாட்டிகளில் பொஸ்பரஸ் பூசப்பட்ட மேலதிகக் குறிகாட்டி வளைவுகளைப் பயன்படுத்துவதற்காக வீரன் தனது சட்டைப் பைகளில் வேகமாகத் தொலைந்துபோகக்கூடிய இந்த வளைவுகளைத் தன்னுடன் எடுத்துச்செல்ல வேண்டியதாக இருந்தது. இதற்குப் பதிலீடான செயற்பாடு யாதெனில் திரீத்தியம் பூசப்பட்ட மேலதிகத் தொழினுட்பக் குறிகாட்டிகளைப் பயன்படுத்துவதேயாகும். இது சாதாரண குறிகாட்டி இரவில் தெரியாதபோது உயர் துல்லியத்துடன் சூட்டை மேற்கொள்ள உதவுகின்றது.


இன்று எங்களது அரசியல்வாதிகளால் செச்னிய மயமாக்கல் தத்தாரியமயமாக்கல் அல்லது தகிஸ்தான்மயமாக்கல் போன்ற ஏதாவதொரு உள்நாட்டுப் போரை தடுக்க முடியுமாக இருந்தால் அது ஆப்கானிஸ்தானில் 1985 ஆம் ஆண்டுக்குப்பின் நடந்ததைப்போல பிறிதொருவனின் கைகளால் நெருப்பை நீந்திக் கடப்பது போலத்தான் இருக்கும். போரின் சகல சுமைகளையும் நாங்கள் எங்களது தோளில் அளவுக்கதிகமாகச் சுமக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். தேவையற்ற இழப்புக்களைத் தவிர்ப்பதற்காகவும் தரமற்ற தயார்ப்படுத்தல் ஆளணிகளுக்குப் போதிய ஆயுதமற்ற நிலை மற்றும் பூரணப்படுத்தாமை போன்ற காரணத்தாலும் படைப்பிரிவுகள் கொண்டுசெல்கின்ற கனரக ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரியுங்கள் கிட்டத்தட்ட நேராகச் சூடு செல்கின்ற கூடுதல் தூரத்திற்கு நேர்ச் சூட்டைச் சுடும் தன்மை கொண்ட ஆயுதங்களுக்கு நிபுணர்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். ஒரேயளவு எடையைக் கொண்டிருக்கின்றபோதும் பெரிய குழல்விட்ட இயந்திரச்சுடுகலன் 'உதேஸ்' (12.7 மி.மீ). ஏ.ஜி.எஸ் - 17 ஐ விடக்கூடிய அனுகூலத்தைக் கொண்டதாக விளங்குகின்றது. இது இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் எதிரி எங்கிருந்தாலும் அதாவது செங்கல் காப்புக்குள்ளோ பி.ரி.ஆர். கவசத்திற்குள்ளோ நெரிசலான பற்றைக்குள்ளோ உலங்குவானூர்திக்குள்ளோ அவன் எங்கு ஒளிந்தாலும் அவனைத் தாக்க உதவுகின்றது.

மோட்டார்த் தாக்குதலின் அனுகூலங்களைப் பற்றி அல்லது குறைகளைப் பற்றி நிறையக் கூறலாம். பிரதான பிரச்சினை யாதெனில் சூட்டாளனின் தயார்ப்படுத்தல் தரமும் சூட்டுத் திருத்தத்தை மேற்கொள்ளும் சாத்தியமுமாகும். இப்பொழுது மோட்டாரின் நிறையைப் பாருங்கள். அடித்தட்டு. 20 - 30 எறிகணைகள் ஆகியன என்றால் இப்பொழுது நீங்கள் மேலதிகமாக உங்கள் பிளாட்டூனுக்கு 120 - 150 கி.கி சுமையைப் பெற்றுள்ளீர்கள். இவ்வளவு சுமையையும் நீங்கள் சமாளித்துக்கொள்வீர்களா என்பதை நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். உங்களுடன் ஓர் ஆட்டிலறிச் சூட்டுத்திருத்தலாளனை இழுத்துக்கொண்டு சென்று ஆட்டிலறிச் சூட்டுக்காப்பு வழங்குபவர்களுடன் நிலையான தொடர்பையும் கொண்டிருப்பீர்கள் என்றால் மிகவும் இலகுவாக இருக்கும். காவல் நிலைகள் தற்காப்பு நிலைகள் 2 -4 கி.மீ தொலைவில் திறந்தவெளியிடத்தில் குவிந்துள்ள படைகள் ஆகிய இடங்களிலிருக்கின்ற அரச படைகளுக்கெதிராக மறைப்பிலிருந்து சூடுகளை மேற்கொள்வதற்கு கெரில்லாக்களுக்குரிய ஆயுதமான மோட்டார் மிக நல்லதாகும். எமது படைகள் இடையிடையே குறுந்தூர இடைவெளியில் மறைப்பிற்குள்ளிருக்கின்ற எதிரியுடன் சமர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பிற சந்தர்ப்பங்களில் கெரில்லாக்கள் வழக்கமாகச் சமரிடுவதில்லை. அத்துடன் என்ன விலைகொடுத்தேனும் சமரைத் தவிர்க்கவும் முயற்சிக்கின்றார்கள்.

தொடர்வான்....

# சட்டத்துறை இதுவரை சாதித்தது என்ன?

பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்கேஸ்வரன்



சட்டத்தினுடைய வளர்ச்சியை பற்றி நாங்கள் ஆராய்வது இலங்கையிலே நாங்கள் ஏதாவது ஒரு நிகழ்வு நிகழ்ந்தால் அதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பது தான் வழமையாக இருக்கின்றது. மற்றைய நாடுகளிலே சட்டத்துறையிலே வருங்காலத்தைப் பற்றி சிந்தித்து அதற்கு ஏற்ற சட்டங்களை இயற்றுவது தான் வழக்கம். ஆகவே இந்த தருணங்களிலே இவ்வாறான பிரச்சனைகள் ஏற்பட்டால் அதற்கேற்றவாறு நாங்கள் சட்டங்களை தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே அவர்கள் வரும்முன் காப்போம் என்பதற்கிணங்க முன் ஏற்பாடாக அதற்குரிய சட்டங்களை அவர்கள் ஏற்படுத்துகின்றார்கள்.

எனவே இலங்கையில் நாங்கள் சட்டம் இயற்றும் பொழுது அந்தந்த தேவைகளுக்காக அவ்வப்போது ஏற்படும் விடயங்களுக்காக சட்டங்களை ஏற்படுத்திவிட்டு அதன் பின்னர் அதை வைத்துக்கொண்டு வேறு என்ன செய்யலாம் என யோசித்து அதை ஏனைய விடயங்களுக்கும் பாவித்துக்கொண்டு இருக்கின்றோம். முக்கியமாக பயங்கரவாத தடைச்சட்டத்தை நாங்கள் எடுத்துக்கொள்ளலாம். பயங்கரவாத தடைச்சட்டத்தை முதலில் கொண்டுவந்தபொழுது அது ஜே.வி.பிக்கு எதிராக என்றுதான் வந்தது அதனால் அமிர்தலிங்கம் போன்றவர்கள் அதற்கு ஆதரவு கூட அளித்தார். ஆனால் காலசிரமத்திலே அது தமிழ் மக்களுக்கு எதிராக அது இன்றுவரையிலே பாவிக்கப்பட்டு வருகின்றது. அது பிழையான சட்டம் ஏனென்றால் எங்களுடைய பாரம்பரிய சட்டத்திற்கு கீழே ஒருவருடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது. அதாவது மிகவும் கடுமையான குற்றங்கள் சம்மந்தமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது அது நிரூபிக்கப்படவேண்டிய விடயங்கள். ஆனால் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை சரியென்று ஏற்றுக்கொண்டு அதனடிப்படையில் மட்டும் அவர்கள் சிலரை குற்றவாளிகளாக கண்டிருக்கின்றார்கள். அதுவொரு கேவலமான விடயம் ஏனென்றால் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். யாராவது ஒருவரின் அதட்டலின் நிமித்தமோ அல்லது வேறுயாரிற்கும் ஏதாவது நடக்கப்போகின்றது என்ற பயத்திலோ அல்லது தனக்கு ஏதாவது நடக்கும் என்ற பயத்திலோ ஏதாவதொரு காரணத்திற்காக உண்மைக்கு புறம்பாக குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை ஒருவர் அழிக்கலாம்.

எனவே சட்டத்தை பொறுத்தவரையிலே நீதிமன்றங்களை பொறுத்தவரையிலே உண்மையாகவே அந்த நிகழ்ச்சி நடந்ததா என்பதை அறிந்துகொள்ளும் ஒரு கடப்பாடு நீதின்றங்களுக்கு இருக்கின்றது. உதாரணத்திற்கு சென்பன்றிட்ஸை நான் நேற்று எரித்துவிட்டேன் என்று ஒருவர் கூறுகின்றார். அவருடைய அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலே நாங்கள் அவரை சிறைக்கு அனுப்பி நீண்டகால சிறையிலே அடைக்கின்றோம். ஆனால் உண்மையிலே சென்பன்றிட்ஸ் அலரிமாளிகை எரிக்கப்பட்டதா என்று நாங்கள் சிந்திப்பதில்லை அதற்குரிய நடவடிக்கையிலே அதை அறிந்துகொள்வதற்கு நாங்கள் எந்தவிதமான நடவடிக்கைகளிலும் இறங்குவதில்லை. சென்பன்றிட்ஸை எரிக்காமல் இருந்திருந்தால் அல்லது அவர் வேறொரு இடத்தை எரித்து அதற்கு சென்பன்றிட்ஸ் என்று கூறியிருந்தால் அதை எரித்ததற்காக அவரிற்கு தண்டனை கொடுப்பது சட்டத்திற்கு புறம்பானது. எனவே முதலில் எங்களது வழக்கான சட்டத்துக்கு விரோதமாகத்தான் ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பயங்கரவாத தடைச்சட்டம் ஏற்றுக்கொள்கின்றது. அதன் பின்னர் அதிலிருக்கின்ற விடயங்கள் உண்மைதானா என்று ஆராய்வதற்கு எந்த நீதிமன்றங்களும் நடவடிக்கைகள் எடுப்பதில்லை. நான் உச்ச நீதிமன்றத்தில் இருக்கும் பொழுது இது சம்மந்தமாக ஒரு தீர்ப்பையும் கொடுத்தேன். ஏனென்றால் இது மிகவும் முக்கியமானது சட்டம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அதில் கூறப்பட்ட விடயங்கள் உண்மையிலே நடைபெற்றதா என்கின்றதை அறியும் பொறுப்பு நீதிமன்றங்களுக்கு இருக்கின்றது என்று நான் கூறியிருந்தேன். இதனை எதற்காக நான் கூறவருகின்றேன் என்றால் எங்களுடைய சட்டங்கள் ஒரு முறையான விதத்திலே வளரவில்லை. அந்தந்த காலகட்டத்திலே ஜே.வி.பிக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டங்கள், விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டங்கள். போதைப்பொருட்கள் பாவிப்பது தொடர்பான சட்டங்கள் என நாங்கள் பலவிதமான சட்டங்களை நடப்பதற்கு எதிராக அதன் காரணமாக சட்டங்களை இயற்றிக்கொண்டுவருகின்றோம்.

எனவே எங்களது சட்டங்களினுடைய சரிபிழைகளை அல்லது பெறுபேறுகளை அல்லது அதனுடைய தாக்கங்களை பாதிப்புக்களை ஆராய்ந்து பார்த்தோமானால் பலவிதமான சட்டங்கள் தற்பொழுது மிகவும் பலமையடைந்திருக்கின்றது அவற்றை நாங்கள் நவீனப்படுத்த வேண்டும். சில விடயங்களுக்கு சிலவேளைகளிலே ஆயிரம் ரூபாய் தான் அதற்கு தண்டம் என கூறப்பட்டிருந்தால் தற்போதைய காசிலே அந்த ஆயிரம் ரூபாய் போதாமல் இருக்கக்கூடும். ஆகவே இது சம்மந்தமாக நாங்கள் பலவிதத்திலும் ஒரு முறையான ஆராய்ச்சி செய்து சட்டங்களை திருத்தவேண்டிதொரு அவசியம் எங்களுக்கிருக்கின்றது. தற்பொழுது இருக்கும் சட்டங்கள் பலவிதங்களிலும் எங்களுக்கு தாக்கங்கள் ஏற்படும் முக்கியமாக தமிழ் மக்களுக்கு தாக்கம் ஏற்படுகின்ற விடயங்கள் பல இருக்கின்றன. அதாவது தற்போதைய நிலையிலே தமிழ் மக்களுடைய பாரம்பரிய காணிகளை அபகரித்துக்கொள்ளும் விதமாக திணைக்களங்களுக்கு சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மாகாவலி அதிகாரசபைக்கு அந்த உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது மிகவும் முக்கியமாக தமிழர்களுக்கு எதிராக வேணுமென்றே ஆக்கப்பட்ட சில சட்டங்கள். இவ்வாறான சட்டங்களை எல்லாம் நாங்கள் மீள்பரிசீலணை செய்து அவற்றை இல்லாமலாக்கி ஒரு முறையான மற்றைய நாடுகளில் வழங்கப்படும் சட்டங்களுக்கேற்றமாதிரி நாங்கள் எங்களது சட்டங்களை திருத்தியமைக்க வேண்டும். இறுதியாக ஒரு விடயத்தை கூறவேண்டியிருக்கின்றது. இலங்கையை பொறுத்தவரையிலே 5 விதமான தனிப்பட்ட சட்டங்கள் இருக்கின்றன. குற்றவியல் சட்டத்தைவிட சிவில் நடைமுறையிலே பார்த்தோமானால் 5 சட்டங்கள் இருக்கின்றன. ஒன்று ரோமல் டச்சு சட்டம் இரண்டாவது ஆங்கில சட்டம் மூன்றாவது கண்டிய சட்டம் நான்காவதுதேசியவழமைஜந்தாவதுமுஸ்லிம் சட்டம். எனவே அந்தந்த ஆட்களுக்கு அந்தந்த சட்டங்கள் இருப்பதாக எடுத்துக்கொண்டால் அவர்களுக்குரிய சட்டங்கள் தான் அவர்களுக்கு ஏற்புடையதாகும். ஆனால் தற்பொழுது பலவிதத்திலும் இந்த தனிப்பட்டவர்களுடைய சட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். சிங்கள மக்களுக்குரிய சட்டங்களை முன்நிலைப்படுத்தி அவற்றை கொண்டு நடத்த வேண்டும் என்று கருதி இந்த கருத்துக்கள் சிங்கள மக்களால் சிங்கள மக்கள் தலைவர்களால் வெளியிடப்பட்டு வருகின்றது. அது எந்தளவுக்கு சரியோ பிழையோ என்று நாங்கள் சிந்திக்கவேண்டியிருக்கின்றது. சில நடவடிக்கைகள் சில சட்டங்கள் அது இயற்றப்பட்ட காலத்திலே சரியாக இருந்திருக்கும் முறையாக இருந்திருக்கும் ஆனால் தற்போது இருக்கின்ற சுழலிலே தற்போதைய மக்களினுடைய கருத்துக்கள் பரவியிருக்கின்ற முறையிலே அவர்களுடைய முன்னேற்றகரமான அல்லது தற்போதைய நவீன சிந்தனைகளின் அடிப்படையிலே பார்த்தால் சில சட்டங்கள் பிழையானதாக தெரியக்கூடும். இது சம்மந்தமாகவும் உரியவர்களுக்கு அந்த சட்டங்கள் யார் யாரிற்கு ஏற்புடையதாக இருக்கின்றதோ அவர்களைக் கொண்டு மறுபரிசீலனை செய்து சட்டங்களை உரியவாறு சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

பல சட்டங்கள் வழக்கொழிந்துபோய்விட்டன. அதாவது வழக்கொழிந்து என்று சொல்வதிலும் பார்க்க அதனுடைய தாக்கம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மாற்றியமைக்க வேண்டிய சட்டங்கள் இருக்கின்றன. அதைவிட பிழையான சில சட்டங்கள் அதாவது ஏதாவது ஒன்று நடக்கும் பொழுது அதற்காக இயற்றப்பட்ட சட்டங்களை நாங்கள் தொடர்ந்தும் வைத்துக்கொண்டிருக்கின்றோம். அந்த சூழல் மாறுபட்டதன் பின்பாடும் அதை வைத்துக்கொண்டிருக்கின்றாம். மூன்றாவதாக பொதுவாகவே எங்களுடைய சட்டங்கள் தற்போதைய கருத்தியலுக்கு ஏற்றமாதிரி மீள்பரிசீலணை செய்ய வேண்டும். ஒவ்வொரு சட்டமும் காலம் செல்ல செல்ல அதற்குரிய சூழலுக்கு ஏற்புடையதாக இருக்காது. உதாரணமாக ஐந்தாயிரம் வருடங்களிற்கு முன்னர் ஒருவருடைய பல்லை ஒருவர் எடுத்தால் மற்றவருடைய பல்லை எடுக்க வேண்டும் என்ற முறையிலும். ஒருவர் கையை உடைத்தால் அவருக்கு தண்டனை கொடுக்கும் பொழுது அவருடைய கையை உடைக்க வேண்டும் என்ற முறையிலே அந்த காலத்திலே சட்டங்கள் இருந்தன. இவையெல்லாம் ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்னர் இருந்த சட்டங்கள். இந்தவிதமான சட்டங்கள் எல்லாம் காலச்சிரமத்திலே மாற்றமடைய வேண்டிய காரணம் இருக்கும்பட்சத்திலே நாங்கள் அவற்றை மாற்றியமைக்க வேண்டியதொரு அவசியம் எங்களுக்கு வந்திருக்கின்றது. சட்டத்தில் நாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டிய ஒருகட்டம் இப்பொழுது வந்திருக்கின்றது.

பொதுவாக தற்பொழுது நவீன உலகத்திலே பயங்கரவாதம் என்பது முக்கியமான விடயமாக மாறிவிட்டது. பயங்கரவாத குற்றத்திற்கும் வழமையான குற்றத்திற்கும் இடையிலே ஒரு வித்தியாசம் இருக்கின்றது. வழக்கமாக என்ன நடக்கும் என்றால் பயங்கரவாதம் என்று கூறும் பொழுது அந்த நாட்டினுடைய அரசாங்கம் எதை பயங்கரவாதம் என்று கூறுகின்றதோ அதைத்தான் அவர்கள் பயங்கரவாத குற்றங்கள் என்று சட்டத்திலே அமைக்கின்றார்கள். ஒருவரை கொலை செய்தால் அது வழக்கமான சட்டத்துக்கு கீழே அது கண்டுகொள்ளப்படும். ஆனால் அரசியல் காரணங்களுக்காக கொலை செய்தால் அதை பயங்கரவாதம் என கூறுகின்றார்கள். எனவே பயங்கரவாதம் என்ற சொல் கூட சரியாக வியாக்கியானம் செய்யப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. ஆனால் அது அவ்வாறிருக்கும் பொழுது நாங்கள் புதியதொரு சட்டத்தைக் கொண்டு வருவோம் இதை இல்லாமல் ஆக்குவோம் என்று சொல்லும் பொழுது புதிய சட்டம் சிலவேளைகளில் பயங்கரவாத சட்டத்திலும் பார்க்க மோசமாக இருக்கக்கூடும். எனவே எங்களுக்கு அது தெரியாது. அவர்கள் கூறுவது என்னவென்றால் மற்றைய நாடுகளிலே பயங்கரவாதத்தை எதிர்த்து தயாரிக்கப்பட்ட சட்டங்களுக்கமைவாக அதைப்போன்று நாங்கள் ஒன்றை அமைக்கவிருக்கின்றோம் என்ற முறையிலே கதைக்கின்றார்கள். ஆனால் அவ்வாறானதொரு மாதிரி சட்டம் வந்து அதனை நாங்கள் படித்துப்பார்த்தால் தான் அது சம்மந்தமாக நாங்கள் கூறமுடியும். ஆனால் பயங்கரவாத தடைச்சட்டம் இல்லாமலாக்கப்பட வேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்கமுடியாது. தொடர்ந்தும் பயங்கரவாதம் பயங்கரவாதம் என்று மக்களுடைய ஜனநாயக உரித்துக்களை பாதிக்கும் விதத்திலே நாங்கள் இவற்றை கட்டுப்படுத்தும் விதத்திலே ஒரு ரிப்பிரிஸ் இல்லாமலாக்கும் விதத்திலே இந்த சட்டங்களை பாவிப்பது பிழை என்று தான்படுகின்றது.

எனவே நாங்கள் என்ன காரணங்களுக்காக இந்தசட்டங்களைகொண்டுவரப்போகின்றோம் என்பதை சர்வதேச ரீதியாக படித்து அதன் அடிப்படையிலே புதிய சட்டம் ஒன்றை கொண்டுவந்தால் அது பாதகமில்லை. ஆனால் இப்பொழுதிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டத்தைப்போல் இன்னுமொரு சட்டத்தை கொண்டுவருவதால் எந்த பயனுமில்லை.



# ஜனாதிபதி ரணில் மக்களின் ஆணையைப் பெற்ற தலைவர் அல்ல

**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்**



**கேள்வி : இன்றைய சமகால அரசியல் பார்வையிலே ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான ஆட்சி என்பது நீடிக்குமா அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துமா அல்லது மகிந்த குடும்பத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டை அவர் கொண்டிருக்கின்றாரா அல்லது தமிழ் மக்களின் தேசிய நலன் பிரச்சனையிலே எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றார் என்பது பற்றி உங்களுடைய இந்த சமகால அரசியல் பார்வையிலே எப்படியிருக்கின்றது?**

பதில் : முதலாவதாக ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஆட்சி நடைபெறும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் ஆட்சி செய்வதாக இருந்தால் மக்களின் பிரதிநிதியாக மக்கள் ஆணையை பெற்ற ஒரு தலைவரின் கீழ் அந்த பாராளுமன்றம் இயங்குமாக இருந்தால் அது அந்த தலைமையின் கீழ் ஆட்சி செய்வதாகத் தான் கருதப்படும். ஆனால் ரணில் விக்ரமசிங்க அவர்கள் அவ்வாறானதொரு ஆட்சியை செய்வதாக நான் பார்க்கவில்லை. ஏனென்றால் கடந்த 2020 ஆம் ஆண்டு தேர்தலிலே பலம் வாய்ந்த பாரம்பரிய ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வியடைந்ததும் அந்த 2020 ஆம் ஆண்டு ஒரு ஆசனத்தைக்கூட மக்கள் ஆணையை பெறாத ஒரு கட்சியாக இருந்தது.

ஆனால் இலங்கை முழுவதும் 25 மாவட்டங்களிலும் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்த வாக்குகளை எல்லாம் கூட்டி கழித்து எடுத்து ஒரு தேசிய பட்டியல் ஆசனம் கிடைத்தது. அந்த தேசிய பட்டியல் ஆசனம் அறிவித்ததன் பிற்பாடியாக உடனடியாக யாரை அடுத்த ஐக்கிய தேசிய பட்டியலுக்குள் அனுப்புவோம் என்ற பிரச்சனையும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் இடம்பெற்ற பொழுது ரணில் விக்ரமசிங்க தான் அந்த பதவியை எடுக்க மாட்டேன் என்று கூட அவர் அறிக்கை விட்டிருந்தால் ஆனால் 6 மாதத்திற்கு பிற்பாடு தான் அவர் சரியாக தேசிய பட்டியல் மூலம் அதில் உள்நுழைந்து அந்த தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக முதலாவதாக வருகின்றார்.

நாட்டில் ஏற்பட்ட அந்த குழப்பநிலை கோட்டபாயராஜபக்ச அவர்களை வீட்டிற்கு அனுப்புகின்ற அந்த போராட்டம் இடம்பெறும் பொழுது ஜனாதிபதி அவர்களின் தற்துணிவால் அவரின் தமையனாக இருக்கும் மகிந்தராஜபக்ச அவரை பதவியில் இருந்து தூக்கிவிட்டு அதற்கு பதிலாக இவர் நியமிக்கப்படுகின்றார் அது இரண்டாவதாக அவருக்கு கிடைத்த அதிர்ஷ்டம் அதன் அடிப்படையில் அவருக்கு மூன்றாவதாக கிடைத்த விடயம் போராட்டத்திலே ஜனாதிபதி அவர்கள் இங்கே ஆட்சி செய்ய முடியாதநிலை ஏற்பட்டதால் அவர் நாட்டை விட்டு மறைவிடத்திற்கு அல்லது வேறு நாட்டிற்குச் செல்லவேண்டி சூழல் ஏற்பட்ட பொழுது ரணில் விக்ரமசிங்க அவர்கள் பிரதமர் என்ற அடிப்படையில் தற்காலிக ஜனாதிபதியாக நியமித்துவிட்டு சென்றார். ஆனால் அந்த தற்காலிக அரசியலமைப்பின் கீழே ஒரு விடயம் இருந்தது. அதாவது ஒரு ஜனாதிபதி பதவி விலகினால் அல்லது உயிரிழந்தால் பிரதமர் தன்னிச்சையாக அந்த ஜனாதிபதி பதவியை ஏற்பார். ஆனால் பாராளுமன்ற பிரதிநிதிகள் மூலமாக அதனை உறுதிப்படுத்த வேண்டும் என்ற ரீதியிலே பாராளுமன்ற உறுப்பினர்கள் 137 பேர் இவரை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்திருக்கின்றார்கள். ஆகவே இவர் மக்கள் ஆணையை பெற்ற ஒரு ஜனாதிபதி அன்றி மக்கள் பிரதிநிதிகள் பெற்ற ஒரு ஜனாதிபதியாக வந்திருக்கின்றார்.

எனவே ஒரு ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அவர் சில முடிவுகளை எடுக்கும் பொழுது அரசியலமைப்பின் அடிப்படையிலே பாராளுமன்றத்தில் சில விடயங்களை கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய நடவடிக்கைகளும் இருக்கின்றது. அவ்வாறான விடயங்கள் வருகின்ற பொழுது இவரின் கோரிக்கை எல்லாம் நிறைவேறுமான என்பது ஒரு கேள்விக்குரியாக இருக்கின்றது. எனவே நாங்கள் முதலாவதாக இங்கே பார்க்க வேண்டிய விடயமாக இருக்கின்றது பல இடங்களிலே தற்பொழுது கூறியிருக்கின்றார். 75 வது சுதந்திர தினம் எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி வருவதற்கிடையில் வடமாகாண மக்களின் பிரச்சனையை தீர்ப்போம் என்று தான் அவர் கூறியிருக்கின்றார்.

வட கிழக்கு மக்களின் பிரச்சனைகளை தீர்ப்போம் என்றுகூட அவர் கூறவில்லை. அதிலும் கூட பிரித்தாளும் தந்திரோபாயத்தை அதில் பாவித்திருக்கின்றார். இணைந்த வடகிழக்கில் சமஷ்டியை கேற்கின்ற தமிழ் தேசிய தலைமைக்கு அவர் அதில் ஒரு ஆப்பு வைத்திருக்கின்றார் வடக்கு மக்களின் பிரச்சனை என்று அவர் அதை கூறுகின்ற பொழுது சில ஊடகங்கள் வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய அரசியல் தீர்வு விடயமாக செய்யப்போகின்றார் அதைத் தீர்க்கப்போகின்றார் தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற விடயங்கள் தொடர்பாக எல்லாம் செய்திகள் வருகின்றது. அதன் பின்னர் அவர் தற்பொழுது கிழக்கில் கூறுகின்றார் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதாக இருந்தால் தமிழ் கட்சித்தலைமைகள் எல்லாம் ஒன்றுபட்டு தன்னுடன் வாருங்கள் தான் ஏதோ தீர்வை பெற்றுக்கொடுக்கின்றோம் என்ற போர்வையில் தான் அவர் கூறுகின்றார். அவர் நினைப்பது என்னவென்றால் நிச்சயமாக தமிழ் கட்சிகள் என்றுமே ஒற்றுமைப்பட்டு வரமாட்டார்கள் என்று தான்.

இதற்கு நான் பதில் கொடுத்திருக்கின்றேன் நீங்கள் தீர்வைப்பெறவேண்டுமாக இருந்தால் ஒற்றுமைப்பட்டு வாருங்கள் ஒற்றுமைப்படாவிட்டால் சர்வதேசத்திற்கு என்ன சொல்லப்போகின்றார் அவர்களிடம் ஒற்றுமையில்லை எனவே நாங்கள் வரவில்லை என்று தான். ஆனால் அதற்கு தமிழ் தேசிய கட்சியிலிருக்கின்ற பலரும் அதற்கு பதில் கொடுத்திருக்கின்றனர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அவர்கள் பதில் கொடுத்திருக்கின்றார். அதுபோல தமிழ் தேசிய மக்கள் முன்னணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொடுத்திருக்கின்றார். பல்வேறுபட்டவர்களும் பதில் கொடுத்திருக்கின்றார்கள் அவர்களின் பதில் என்னவென்றால் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு தான் தயாராக இருந்தால் தாங்கள் அது தொடர்பாக கதைப்பதற்கு வருவதற்கு தயாராக இருக்கின்றோம் என்ற விடயத்தை கூறியிருக்கின்றார் ஆனால் அந்த விடயத்திற்கு தொடர்ச்சியாக அவர் மௌனம் சாதித்துக்கொண்டிருக்கின்றார் இந்த நிலையிலே தற்பொழுது நாங்கள் ஒன்றை பார்க்கக்கூடியதாக இருக்கின்றது நீங்கள் கூறியது போன்று பல்வேறுபட்ட ஆய்வாளர்கள் அரசியல் வல்லுனர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் அல்லது பத்தி எழுத்தாளர்கள் கருத்துக்களின்படி அடுத்த ஒரு ஜனாதிபதி தேர்தலில் தான் வருவதற்கான விடயத்தை முன்கூட்டியே ஒரு ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம் என்ற கருத்தும் இருக்கின்றது.

இன்னொரு கருத்தும் இருக்கின்றது பலமான ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமல் தன்னால் அவர் முன் நின்று செல்ல முடியாமல் இருப்பதன் காரணமாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28க்குள் வருடம் முடிவதற்குள் பாராளுமன்றத்தை கலைக்கின்ற அதிகாரம் இவரிற்கு கிடைக்கின்றது. அதை வைத்து அரசியல் பாராளுமன்றம் கலைக்கின்றாரா அல்லது இந்த ஆட்சியை தொடர்கின்றாரா என்பதை நாங்கள் சற்று பொறுத்திருந்து பார்க்க வேண்டியதாக இருக்கின்றது.

இன்னுமொரு விடயமாக தற்பொழுது மொட்டுக் கட்சியில் இருக்கின்றவர்கள் இன்னும் பலமாக இருக்கின்றார்கள் பாராளுமன்றத்திலே இதில் எந்தவொரு மாற்றுக்கருத்துமில்லை. ஏனென்றால் கடந்த மூன்று நான்கு விடயங்களை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்த பொழுது பெரும்பான்மையாக தற்பொழுதிருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்ததாக காட்டப்பட்டாலும் அதில் வருகின்ற விடயங்களை பார்க்கும் பொழுது அவரை ஆதரித்த அனைவரும் மகிந்த ராஜபக்ச அவர்கள் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பசில் ராஜபக்ச அவர்கள் மற்றும் நாமல் ராஜபக்ச அவர்களின் வழிநடத்தலில் தான் அவர்கள் வாக்களித்துக்கொண்டிருக்கி ன்றார்கள். மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆட்சி என்பது மறைமுகமான நிழல் ஆட்சியாக இருந்துகொண்டிருக்கின்றது.

அந்த நிழல் ஆட்சிக்கு உறுதுணையாக தற்பொழுது இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அவர்களை காப்பாற்றுகின்ற ஒரு விடயத்தை செய்கின்றார் என்ற பார்வையும் இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால் ரணில் விக்ரமசிங்கவை பொறுத்தவரையிலே எல்லோருக்கும் தெரியும் ஒரு பலம்வாய்ந்த, புத்திக்கூர்மையான பலவருடம் அனுபவம் பெற்ற பிரதமராக பலவருடங்கள் வரை இருந்தவர். எனவே அவர் யாரை எவ்வாறு தள்ளலாம், வெட்டலாம் என்ற விடயத்திலே அனுபவம் பெற்றதொரு ஜனாதிபதியாக இருக்கின்றார்.

எதிர்காலத்திலே நான் நினைக்கின்றேன் 2023 ஆம் ஆண்டு வருகின்ற பொழுது இந்த அரசியலிலே நாங்கள் நினைத்ததுபோன்று தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் என்பதை தனிப்பட்ட முறையிலே நான் நினைக்கவில்லை. ஏனென்றால் தனியொரு மனிதனாக வந்து தனியொரு மனிதனாக மேசையில் இருந்து தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுடன் அவர்கள் சொல்லுகின்ற கோரிக்கைகளை ஏற்று தனியொருவராக அதனை நிறைவேற்றுவாரா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கின்றது.

**கேள்வி : இவ்வாறு இருக்கும் பொழுது வடகிழக்கிற்கான தீர்வு திட்டங்கள் என்பது எந்தளவு சாத்தியம் அல்லது சாத்தியமற்றுப்போகும் அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு தான் என்ன?**

பதில் : இதிலே தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமல்ல தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் அல்லது புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் அமைப்புக்களின் நிலைப்பாடு என்னவென்றால் கடந்த 73 வருடங்களாக கேட்கின்ற ஒரு கேள்வியைத் தான் கேற்கின்றார்கள். வடகிழக்கிணைந்த ஒரு மாநிலத்தில் சுயாட்சி அதாவது சமஷ்டி ஆட்சில் ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படும்பட்சத்திலே பல்வேறு வகையான பொருளாதார சிக்கல்களை நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலே புலம் பெயர்ந்து வாழுகின்ற மக்கள் உதவிபுரிவார்கள் ஆகவே அவ்வாறானதொரு தீர்வு தேவை என்பது தான் சர்வதேசத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் தேசிய தலைவர்கள் அனைவருமே நான் தமிழ் தேசிய கூட்டமைப்பை மட்டும் கூறவில்லை.

தமிழ் தேசிய அரசியல் செய்கின்ற சகல கட்சிகளின் நிலைப்பாடாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே அவ்வாறானதொரு தீர்வுக்காக அவர் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வாராக இருந்தால் நிச்சயமாக அனைவராலும் அதை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆனால் அவ்வாறு செய்வாரா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கின்றது அதைத்தான் நான் கூறிக்கொள்ளுகின்றேன்.

**நேர்காணல்**
**இரணியன்**



# ஜனாதிபதி ரணிலின் வடபகுதி விஜயமும் அரசியல் தீர்வும்

நவம்பர் மாதம் 10ஆம் திகதி, பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "இலங்கையின் உள்விவகாரங்களில், வெளியார் தலையீடு தேவையில்லை. நாட்டின் தமிழ் சிறுபான்மையினர் எதிர்நோக்கும் நிலுவையில் உள்ள சில பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில், அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்த, சிறுபான்மையின கட்சியினருக்கு அழைப்பு விடுத்துள்ளேன்" எனத் தெரிவித்திருந்தார்.

"அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தி, 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் நிலுவையில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு, நான் உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்" என்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார். பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்ற 75ஆவது ஆண்டு நிறைவை 2023 பெப்ரவரி நான்காம் திகதி கொண்டாடவுள்ள நிலையில் தான், ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

அத்தோடு, **"எங்கள் நாட்டின் விவகாரங்களில் மற்றவர்கள் தலையிடத் தேவையில்லை. எங்கள் பிரச்சினைகளை நாங்கள் தீர்க்க முடியும் அதைத்தான் நாங்கள் நிறைவேற்ற முயலுகின்றோம்"** என்று, எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடாமல், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமையும் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருந்தது.

**"இனப்பிரச்சினையா? அப்படியென்றால் என்ன? அப்படியொன்று இருக்கிறதா? நாம் அனைவரும் ஒரு தேசம் நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள். இங்கு சிறுபான்மையினர் என்று யாரும் கிடையாது. அகராதியில் சிறுபான்மையினர் என்ற சொல்லே கிடையாது" என்று பொய்க் கற்பிதங்களை பகட்டாரவாரமாகச் சொல்லும் இலங்கை அரசியல்வாதிகளிடையே, "இங்கு சிறுபான்மையினருக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. அவை தீர்க்கப்பட வேண்டும். அது, 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் அடையப்பட வேண்டும்"** என்று இந்நாட்டின் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பேசியதும், தமிழர் தரப்புக் கட்சிகளை இதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்திருப்பதும் நல்ல மாற்றம் தான்.

இந்தப் பேச்சினூடாக, இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பதை நேரடியாகவோ, மறைமுகமாகவோ இலங்கையின் ஜனாதிபதி அங்கீகரித்துள்ளதுடன், அது விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் பதிவு செய்திருக்கிறார்.

இது மஹிந்த, கோட்டா, சஜித் ஏன் அநுர ஜனாதிபதியாகி இருந்தால் கூட இடம்பெற்றிருக்காது. **மஹிந்தவும், கோட்டாவும் "இனப்பிரச்சினையா, அப்படியென்றால் என்ன?** நாம் அனைவரும் இலங்கையர்கள்" என்பார்கள். **சஜித், "என் அகராதியில் சிறுபான்மை என்ற சொல்லே இல்லை"** என்பார்.

ஜே.வி.பி எனும் பெரும்பான்மையின இனவாதத்தை அடிநாதமாகக் கொண்ட இடதுசாரிக் கட்சியின் தலைவர் **அநுர, "இங்கு இனவாதம் என்பது, முதலாளித்துவத்தின் வேலை இங்கு இனங்கள் கிடையாது வர்க்கங்கள் தான் இருக்கின்றன"** என்பார்.

ஆகவே, இவர்கள் எவரும் இத்தனை காலத்தில் தாமாக முன்வந்து அங்கிகரிக்காத ஒரு பிரச்சினையின் இருப்பை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கிகரித்திருக்கிறார். நன்று!

இந்தப் பேச்சுவார்த்தைகள், தமிழர் தரப்புக்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பு. இதனை தமிழர் தரப்பு மிகக்காத்திரமான வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு முதற்படியாக, தமிழர் தரப்பு, தமது கட்சி அடிபாடுகளைக் கடந்து, குறைந்தபட்ச கொள்கை அடிப்படைகளிலேனும் ஒன்றுபட்டு, ஒரு குரலாகப் பேச வேண்டியது காலத்தின் தேவையாகிறது.

இந்த இடத்தில், தமிழர் தரப்பும் ஒன்றை நினைவில் வைத்திருத்தல் அவசியமாகிறது. எப்படி மேற்சொன்னதைப்போல, மஹிந்த, சஜித், அநுர ஆகியோரது கருத்துகள் பகட்டாரவார அபத்தமான கருத்தாக தமிழர்களால் பார்க்கப்படுகிறதோ, அதைப்போல, தமிழர் தலைமைகளுக்கு பகட்டாரவார அபத்தங்களைத் தவிர்த்துவிட்டு, இந்தவாய்ப்பைப்பயன்படுத்தி, சுமூகமாகதொரு தீர்வை எட்ட முயல வேண்டும்.

பேச்சுவார்த்தை மேசையென்பது, தேர்தல் மேடையல்ல. அது மக்களிடம் கைதட்டு வாங்குவதற்கான இடம் அல்ல. அது, தான் என்ற ஆணவமும் 'ஈகோ'வும் ஆட்டம் போடும் இடமல்ல. அது வழக்காடும் இடமும் அல்ல. பேச்சுவார்த்தை மேசையென்பது காரியத்தை சாதிக்கும் இடம் சமரசத்துக்கான இடம்.



> **"எங்கள் நாட்டின் விவகாரங்களில் மற்றவர்கள் தலையிடத் தேவையில்லை. எங்கள் பிரச்சினைகளை நாங்கள் தீர்க்க முடியும் அதைத்தான் நாங்கள் நிறைவேற்ற முயலுகின்றோம்"**

இந்த இடத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான், வடக்கு-கிழக்கு தமிழர் தலைமைகளைப் பற்றி முன்னர் சொன்ன ஒரு விடயம் கவனத்தில் கொள்ளத்தக்கது. "பேச்சுவார்த்தைக் கலையானது, ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தல் அதில் ஒன்றை முழுமையாக வெற்றி கொள்ளுதல். இரண்டைப் பகுதியளவில் வெற்றி கொள்ளுதல். இரண்டைத் தற்காலிகமாக வேறொரு நாளுக்குக் கிடப்பில் வைத்தல்" என்று சொன்னார். "நாங்கள் தொழிற்சங்கவாதிகள் ஆதலால் எமக்கு இந்தப் பேச்சுவார்த்தைக் கலை தெரியும். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் பெரும்பாலானோர் சட்டத்தரணிகள். அவர்களுக்கு வழக்கை மிகச் சிறப்பாக வாதாடத் தெரியுமே அன்றி, சலுகைகளைப் பெற்றுக்கொள்ளத் தெரியாது" என்று சொன்னார்.

"பயத்தின் காரணமாக ஒரு போதும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டாம். ஆனால், பேச்சுவார்த்தைக்கு ஒரு போதும் பயப்பட வேண்டாம்" என்றார் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜே.எப் கென்னடி.

தமிழர் தரப்பு இன்று எதற்கும் அஞ்சாமல், தமிழ் மக்களின் ஏகோபித்த நலனை மட்டும் முன்னிறுத்தி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட ஒரு சந்தர்ப்பம் உருவாகியிருக்கிறது. அதைத் தமிழர் தரப்பு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். தனிநபர் ஈகோக்களால், இந்நாட்டின் மக்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதொரு நன்மை கிடைக்காது போய்விடக்கூடாது.

அதேவேளை இது, வரலாற்றில் இன்னோர் ஏமாற்றமாகவும் அமைந்து விடக்கூடாது. ஆகவே, தமிழர் தரப்பு இதனை மிகச்சரியாகவும், மிக இலாவகமாகவும் கையாளுதல் அத்தியாவசியமாகிறது. கட்சி நலன், தனிநபர் நலன்கள் என்பவற்றைத்தாண்டி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சிந்திக்கவும், செயற்படவும் வேண்டிய தருணம் இது.

மேலும், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் அந்நியத் தலையீடு தேவையில்லை என்பதை ஜனாதிபதி தெளிவாக அழுத்திச் சொல்லவும் காரணம் இருக்கிறது. இலங்கையின் இனப்பிரச்சினை இலங்கையில் அந்நியர்கள் தலையீடு செய்வதற்கான துருப்புச் சீட்டாக மாறியிருக்கிறது.

குறிப்பாக, இந்தியாவானது, இலங்கையில் தலையீடு செய்வதற்கான துருப்புச் சீட்டாக இனப்பிரச்சினையைப் பயன்படுத்திய வரலாறு இன்னும் இந்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பினராலும் மறக்கப்படவில்லை. இந்திய சமாதானப் படை, இந்த மண்ணில் கட்டவிழ்த்து விட்ட அட்டூழியங்களை மக்கள் மறக்கமாட்டார்கள். இன்றும் பிரதான தமிழ் அரசியல் கட்சிகளை இந்தியா ஆட்டுவித்து வருகிறது என்ற குற்றச்சாட்டு, பரகசியமான இரகசியமாக பேசப்படுகிற விடயம்.

பிரதான தமிழ்க் கட்சிகள் எந்தவொரு முக்கிய முடிவையும் இந்தியாவுடன் கலந்தாலோசிக்காது எடுப்பதில்லை என்பதும் பரகசியமான இரகசியமாகும். ஆகவேதான், ஜனாதிபதி தமிழ்த் தரப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது, அந்நியத் தலையீடு தேவையில்லை என்பதையும் அழுத்திச் சொல்லியிருக்கிறார்.

இலங்கைக்கு இந்தியா உதவி செய்திருக்கிறது. இந்தியா, தமிழ் மக்களுக்கு உதவி செய்திருக்கிறது. அது உண்மை. ஆனால், அந்த உதவிகளுக்குப் பின்னால் மனித நேயமும் தமிழ் மக்கள் மீதான பாசமும் அக்கறையும் மட்டும்தான் இருக்கிறது என்று எண்ணினால் அது தவறு. 'இந்திய நலன்' என்பது தான் இந்திய வெளியுறவுக் கொள்கையின் முக்கியமான அடிப்படை. அந்த அடிப்படையை மறைமுகமாகப் பாதிக்கிற எந்த காரியத்தையும் இந்தியா செய்யாது. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு, அதன் வழிமுறைகள் பற்றியெல்லாம் இந்தியாவுக்கு மிகுந்த அக்கறை இருப்பதற்கான முக்கிய காரணம், இலங்கையின் அமைவிடம். அதிலும், இலங்கையின் வடக்கு, இந்தியாவுக்கு அமைவிட ரீதியில் மிக நெருக்கமாக அமைந்துள்ளதோர் இடம். வடக்கின் மீது தன்னுடைய ஆதிக்கத்தை இந்தியா எப்போதும் வைத்திருக்கவே முனையும்.

அதேவேளை, தமிழ்த் தலைமைகள் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணலாம் (பேண வேண்டும்!). ஆனால், சரணாகதி நிலையில் இருந்து இயங்கும் மனநிலையை மாற்ற வேண்டும். இந்திய நலனைத்தாண்டி, தாம் பிரதிநிதித்துவம் செய்கிற மக்களின் நலனை முன்னிறுத்தி, தமிழ்த் தலைமைகள் இயங்க வேண்டும்.

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக விடுத்திருக்கிற இந்த அழைப்பு, வரலாற்று முக்கியத்துவம் மிக்கது. இதனை வெற்று நடவடிக்கையாக அன்றி, சாதகமானதொரு முன்னெடுப்பாக மாற்ற வேண்டிய கடப்பாடு, தமிழ்த் தலைமைகளுக்கும் ஜனாதிபதிக்கும் உரியது.** மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இது இன்னோர் ஏமாற்றமாக அமைந்து விடக்கூடாது.

–சுழியோடி–

# வவுனியாவில் "போதைமாத்திரை" விநியோகம் மருத்துவர் நிரபராதியா?

அண்மைக்காலத்தில், இலங்கையின் வடபுலத்தில் போதைபொருட்கள் விற்பனைக்கும் நுகர்வுக்கும் எவர் துணை நின்றார்களோ, அவர்களே வெள்ளை உள்ளத்தவர்கள் போன்று இன்று சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு, போதைப்பாவனையைக் கட்டுப்படுத்தபோவதாகத் தெரிவிக்கும் நாடகங்களும் அரங்கேறுகின்றன.

ஆய்வுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணத்தில்



பாடசாலை மாணவர்களை குறிவைத்து, போதை வியாபாரம் நடைபெற்று வருவதாகவும் இது, எதிர்கால சந்ததியின் தனித்துவத்துக்கும் ஆளுமைக்கும் விடுக்கப்படும் சவால் எனவும் எச்சரிக்கப்படும் நிலையிலேயே, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற பகுதிகளில் 'உயிர்கொல்லி போதை மருந்து விற்பனை' என்ற தலைப்பில் செய்தி ஒன்று வெளிவந்தது.

குறித்த மருந்து, 'உயிர்கொல்லி போதை மாத்திரையா' என ஆராய்கின்றபோது, அவ்வாறான மொழிநடை பிரயோகம், தவறானதாகும். குறித்த மருந்து, 'பிரிக்கபிலின்' என்ற வலிநிவாரண மாத்திரையாகும். இது தொடர்பில், மருத்துவர்கள் விளக்கும்போது, "வலி நிவாரணி மருந்துகள் அதிகளவில் பயன்படுத்தப்படும் போது அல்லது, தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படும் போது, அது போதையை தரக்கூடியதாக இருக்கும்" என்கின்றனர்.

எனவே, வலிநீக்கி மாத்திரைகளை நோயாளர்களுக்கு வழங்கப்படும் போது, மருத்துவர்கள் மிகஅவதானமாக செயற்பட வேண்டும் என எச்சரிக்கின்றனர். இவ்வாறான சூழலில், ஔடதங்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல்களைப் பரிசீலிக்கும்போது, மருந்துகள் நான்கு வகையாக வகைப்படுத்தப்படுகின்றன.

**வகுப்பு 1 : சாதாரண மருந்துகள்: இவற்றை (பரசிட்டமோல்) எவரும் மருந்துக்கடைகளில் பெறக்கூடியதாக இருக்கும். இதற்கு மருத்துவரது பரிந்துரை தேவைப்படுவதில்லை.**

**வகுப்பு 2 : மருந்தகங்களில் விற்கப்படும் இதற்கு மருத்துவரின் பரிந்துரை கட்டாயம் இல்லை. (விட்டமின் மருந்துகள், பூச்சிக் குளிசைகள், அல்சர் மருந்துகள், கிறீம் வகைகள்) .**

**வகுப்பு 2 : மருத்துவரின் பரிந்துரையின்படி மாத்திரமே வழங்கப்பட வேண்டும்: குறித்த மருந்துகளை, நோயாளருக்கு வழங்கவதற்கு மருத்துவருக்கு கட்டுப்பாடுகள் இல்லை. எனினும், சரியான முறையில் நோயாளருக்கு வழங்கப்பட்டதா என்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளபோதிலும், அதற்கான பதிவுகள் எதுவும் செய்யப்படுவதில்லை.**

**வகுப்பு 3 : அபாயகரமான மருந்துகள்: அபாயகர ஔடதங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருந்துகளாக இவை காணப்படும். இவற்றை நோயாளிக்கு வழங்கும் போது, அதற்கான பதிவுகள், எத்தனை மாத்திரை வழங்கப்பட்டன, அவை பயன்படுத்தப்பட்டுள்ளதா, மிகுதி உள்ளதா என்பது தொடர்பான பதிவுகள், நேரடி கண்காணிப்பில் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்நிலையில், தற்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படும் 'பிரிக்கபிலின்' வலிநீக்கி மருந்தானது, 'வகுப்பு 2 ' பிரிவுக்குள் அடங்குகின்றது.**



குறித்த மருந்தில் போதைதன்மை அதிகமாக உள்ளது அல்லது, இதைப் பயன்படுத்தும் போது, போதை ஏற்றும் என்கின்றபோது, இந்த மருந்து தொடர்பில் அனைத்துத் தரப்பினருமே அவதானமாக இருந்திருக்க வேண்டும்.

அதற்குமப்பால், 2022ஆம் ஆண்டில், வவுனியாவிலுள்ள இரண்டு மருத்துவர்களின் பெயர்களில் 1,000க்கும் மேற்பட்ட பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. அதுவும், வவுனியாவில் மூடப்பட்டு, நீண்டகாலமாகிய மருந்தகத்துக்கும் ஆயுர்வேத மருந்துகளை மாத்திரமே வழங்கக் கூடிய ஆயுர்வேத வைத்தியர் ஒருவருக்கும் வழங்கப்பட்டுள்ளமையும் விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த மருந்தை விற்பனை செய்யும் முகவர், இது தொடர்பில் அசண்டையீனமாக இருந்தது தொடர்பில், கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. வலி நீக்கி மருந்து, 'உயிர்கொல்லி போதை மருந்து' ஆக இருக்குமேயானால், இதை இறக்குமதி செய்தவர்கள், விற்பனை முகவர்கள் ஆகியோரும் இந்த மருந்து அதிகளவில் விற்பனை செய்யப்படும் போது, பொலிஸாருக்கோ அல்லது சுகாதாரத் துறையினருக்கோ தெரியப்படுத்தி இருக்க வேண்டிய சமூகக் கடமைப்பாடு ஒன்றும் உள்ளது.

மருந்து மற்றும் உணவு பரிசோதகர்களின் திடீர் பரிசோனையின்போது கண்டு பிடிக்கப்படும் வரை, அசண்டையீனமாக இருந்தமை தொடர்பில், சுகாதாரத் திணைக்களம் கவனம் செலுத்துமா என்பதையும் பொறுத்திருந்து அவதானிக்க வேண்டியுள்ளது.

இதற்கும் அப்பால், வவுனியா மாவட்டத்தில் ஆயுர்வேத வைத்தியர், மூடப்பட்ட மருந்தகம், வட மாகாணத்தில் பணியாற்றாத வைத்தியர், கடந்த இரண்டு வருடகாலமாக மாகாணத்தில் இல்லாத வைத்தியர் உள்ளிட்ட 24 மருந்தகங்கள் மற்றும் மருத்துவர்களின் பெயர்களுக்கு குறித்த மருந்து விநியோகிகப்பட்டுள்ள நிலையில், இவை தொடர்பில் அவதானிப்பு செலுத்த வேண்டிய தேவை, சுகாதார திணைக்களத்துக்கு உள்ளதையும் மறுப்பதற்கில்லை. இந்நிலையில், வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், "போதை மருந்து விற்பனை தொடர்பான மருத்துவரிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ள நிலையில், குறித்த பணிப்பாளர் தனக்கு கீழ் பணியாற்றும் உணவு மற்றும் மருந்து பரிசோதகர், இது தொடர்பில் கவனம் எடுக்கவில்லையா? என்பது தொடர்பாகவும் அவதானம் செலுத்த வேண்டும்.

**'பிரிக்கபிலின்' என்ற வலிநிவாரண மாத்திரையாகும்."வலி நிவாரணி மருந்துகள் அதிகளவில் பயன்படுத்தப்படும் போது அல்லது, தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படும் போது, அது போதையை தரக்கூடியதாக இருக்கும்"**

வவுனியாவைப் பொறுத்தவரையில், இரண்டாம் குறுக்கு தெருவில் உள்ள வைத்தியர் ஒருவரில் பெயரில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் குறித்த மருந்து 280 பெட்டிகளும் மே மாதம் 400 பெட்டிகளும் ஜூலை மாதம் 400 பெட்டிகளுமாக மொத்தம் 1,080 பெட்டிகளும், வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் உள்ள மருத்துவர் ஒருவரின் பெயரில் இரண்டாம் மாதம் 200 பெட்டிகளும் ஏப்ரல் மாதம் 100 பெட்டிகளும் ஜூலை மாதம் 360 பெட்டிகளும் ஓகஸ்ட் மாதம் 360 பெட்டிகளும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

உண்மையில் குறித்த மருந்துவர்கள், தமது வைத்தியசாலையின் தேவைகளுக்காக இவற்றைப் பெற்றார்களாக அல்லது அதிகளவான மருந்துகளைப் பெறும்போது இலவசமாக மருந்துகள் கிடைக்கும் என்பதால், பல மருந்தகங்கள் இணைந்து ஒரு மருத்துவரின் பெயரில் பெற்று பகிர்ந்து எடுத்தார்களா?

இல்லையேல், விற்பனை பிரதிநிதிகள் தமது மாதாந்த விற்பனையை அதிகரித்துக் காட்டுவதற்காக, மருந்துவர்களின் பெயர்களில் பற்றுச்சீட்டை இட்டு அப்பொருட்களை அங்கு கொண்டு, சென்று வேறு இடங்களுக்கு மாற்றினார்களா என்ற கோணங்களில் விசாரணைகள் செய்யப்பட வேண்டிய தேவை சுகாதார திணைக்களத்தின் பக்கமே உள்ளதைப் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இதற்குமப்பால், விற்பனை முகவர்களும் குறித்த மருந்துகள் விற்பனை செய்யப்படும் போது, குறித்த வைத்தியர்தான் குறித்த மருந்தைக் கோரினாரா இல்லையா என்பதையும் பொருட்களை விநியோகிக்கும் போது ஆராய்ந்திருக்க வேண்டிய தேவையும் உள்ளது.

எது எவ்வாறு இருப்பினும், 'பிரிக்கபிலின்' மருந்தானது தொடர்ச்சியாக பயன்படுத்தும் ஒருவர், அதற்கு அடிமையாக்கி, அதைப் போதை தரும் மாத்திரையாக பயன்படுத்துவார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில், மருந்துவர்களைக் குறித்து வைத்து, அவர்களுக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடாக இதைக் கொள்ளாமல், வடமாகாணம் மட்டுமன்றி இலங்கை முழுவதும், இளம் சமூகத்தைப் பல்வேறு வடிவில் சூழும் போதை என்ற அரக்கனிடம் இருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, அனைவரது கைகளிலும் உள்ளது. அதற்காக இனம், மதம் பேதங்கள் கடந்து ஒன்றிணைய வேண்டிய தேவையை மேற்குறித்த சம்பவங்கள் சுட்டி நிற்கின்றன.

**நெற்றிபொறியன்**



# பிராந்திய செய்திகள்



## மாணவனை கொடூரமாக தாக்கிய ஆசிரியை!

கிளிநொச்சி பாடசாலை ஒன்றில் வகுப்பறையை மூடி மாணவன் மீது ஆசிரியை ஒருவர் தாக்குதல் நடாத்தியுள்ளதை அடுத்து மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். குறித்த சம்பவம் அன்று(25) இடம் பெற்றுள்ளது. கிளிநொச்சி கண்டாவளை பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்கும் செல்வச்சந்திரன் கலைச்செல்வன் என்ற மாணவனே இவ்வாறு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். தரம் 8 இல் கல்வி கற்கும் குறித்த மாணவன், ஆரம்ப பிரிவிற்கு நண்பர்களுடன் சென்று திரும்பியுள்ளார். இந்த நிலையில், ஆரம்ப பிரிவு ஆசிரியை அழைத்து வகுப்பறை ஒன்றில் அடைத்து அகப்பையினால் குறித்த மாணவனை சரமாரியாக தாக்கியுள்ளார்.

இதனால் குறித்த மாணவன் மயக்க முற்றுள்ளான். பின்னர் கூட சென்ற மாணவர்கள் கதவை உதைத்து உட்சென்று குறித்த மாணவனை மீட்டதுடன், ஆசிரியையை அங்கு அடைத்துவிட்டு முதலுதவி செய்ததுடன் பாடசாலை அதிபருக்கும் தகவல் வழங்கியுள்ளனர். குறித்த விடயம் தொடர்பில் குடும்பத்தாருக்கு தகவல் வழங்கப்படவில்லை எனவும், மாணவன் சிகிச்சைக்குட்படுத்தாமல் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தந்தையை இழந்த குறித்த சிறுவனின் தாயார் வேலைக்கு சென்று வீடு திரும்பிய போது வீட்டில் சுகவீனமடைந்த மகனை அவதானித்து வினவியுள்ளார். காயங்களையும் அவதானித்த தாயார் குறித்த சிறுவனை அழைத்துக் கொண்டு பாடசாலை முதல்வரை சந்தித்து முறையிட்டுள்ளார்.

இதன்போது, குறித்த ஆசிரியருக்கு மனநல குறைவு காணப்படுவதாகவும், அதனால் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் கூறியுள்ளார். இந்த நிலையில் தனது மகனை கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் பாடசாலை சமூகம் அக்கறை கொள்ளவில்லை என பாதிக்கப்பட்ட சிறுவனின் உறவினர்கள் ஆதங்கம் வெளியிடுகின்றனர். சம்பவம் தொடர்பில் குடும்பத்தாருக்கு தகவல் வழங்கவில்லை என்பதுடன், சிகிச்சையும் வழங்க அனுமதிக்கப்படாமை தொடர்பிலும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அறையை பூட்டி தாக்கிய ஆசிரியை, கூரிய ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் மேற்கொண்டிருப்பின் நிலைமை மோசமாகியிருக்கும். அவ்வாறான ஆசிரியரை கடமைக்கமர்த்தியமை தொடர்பிலும் விசனம் வெளியிடுகின்றனர்.



## நீண்ட நாட்களாக வழிப்பறியில் ஈடுபட்ட திருடர்கள் யாழில் கைது

யாழ்ப்பாணத்தில் நீண்ட நாட்களாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சங்கிலித் திருடர்கள் யாழ் மாவட்ட சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் அன்று (நவ 25) கைதுசெய்யப்பட்டுள்ளனர். முன்னதாக இந்த சந்தேக நபர்களுக்கு எதிராக 40 க்கு மேற்பட்ட பிடியாணைகள் நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு, 60 க்கு மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளபோதும் பொலிஸாரால் சந்தேக நபர்களை கைதுசெய்ய முடியாதிருந்தது. இந்நிலையிலேயே யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் சந்தேக நபர்களை நேற்று கைதுசெய்துள்ளனர்.

இத்திருட்டு சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் பெண்கள் மற்றும் வயோதிபர்களை கத்திமுனையில் அச்சுறுத்தி, சங்கிலி பறிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவாகி வந்துள்ள போதும் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படவில்லை. அதனையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் இத்திருட்டு மற்றும் வழிப்பறிச் சம்பவங்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே 42 மற்றும் 43 வயதான சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த இரு சந்தேக நபர்களும் நாவற்குழி மற்றும் அல்வாயை சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது. இவர்களில் முதன்மை சந்கேக நபரான சின்னவன் என்பவர் மீது 15 திகதியிடப்படாத பிடியாணைகள், 8 பிடியாணைகளும், மற்றைய சந்தேக நபரான ஜெயா என்பவர் மீது 5 திகதியிடப்படாத பிடியாணைகள், பருத்தித்துறை நீதிமன்றில் 10 பிடியாணைகள், மேல் நீதிமன்றில் ஒரு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தன என பொலிஸார் தெரிவிக்கின்றனர். குறித்த சந்தேக நபர்களிடம் இருந்து கோப்பாய் பகுதியில் வழிப்பறிக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளொன்றும், நெல்லியடியில் திருடப்பட்டு வழிப்பறிக்கு பயன்படுத்தப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் அவர்களிடமிருந்து 3 சங்கிலிகள் மீட்கப்பட்டுள்ளன. அவை கோப்பாய், நெல்லியடி, கொடிகாமம் ஆகிய இடங்களில் சந்தேக நபர்கள் வழிப்பறி செய்யப்பட்ட நகைகளாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதேவேளை சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைகளின் அடிப்படையில், மேலும் ஒரு நகைக்கடை உரிமையாளர் மற்றும் பெண்ணொருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் சந்தேக நபர்கள் நுட்பமான முறையில் மோட்டார் சைக்கிள்களை திருடி, வீதியில் செல்லும் பெண்களிடம் வழிப்பறி செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர் என்றும், கடந்த 3 மாதங்களாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடந்த வழிப்பறி கொள்ளைகளுடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வீசா, இரட்டைக் குடியுரிமைக்கான கட்டணங்களின் அதிகரிப்பு!

வீசா கட்டணம் மற்றும் இரட்டைக்குடியுரிமைக்கான கட்டணங்கள் ஆகியன அதிகரிக்கப்பட்டுள்ளன.




இதன்படி, டிசம்பர் முதலாம் திகதி முதல் இந்தக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நுகர்வுக்குத் தகுதியற்ற 100,000 கிலோ பால்மா!

இறக்குமதி செய்யப்பட்ட பால் மா தொகையொன்று நுகர்வுக்குத் தகுதியற்றமையினால் கால்நடை தீவனமாக மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் 4 கொள்கலன்களில் இறக்குமதி செய்யப்பட்ட 100,000 கிலோ கிராம் பால் மாவை கால்நடை தீவனமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



சுங்க அதிகாரிகள் குழு ஒன்றினால் கொள்கலன்களை விடுவிப்பதற்காக தரகு பணம் கோரப்பட்டுள்ள காரணத்தால் குறித்த அதிகாரிகள் கொள்கலன்களை விடுவிக்காமல் இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில், சுங்க ஊடகப் பேச்சாளர் சுதத்த சில்வாவிடம், "அத தெரண" வினவியது.

குற்றச்சாட்டை நிராகரித்த அவர், பால் மா கொள்கலன்களை விடுவிப்பதில் சிக்கல் இருப்பின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினூடாக தீர்வு காண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் உள்ளூர் பால் மா நிறுவனங்களை மூடுவதற்கான சதிச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவை சுங்கச்சாவடியில் இருந்து விடுவிக்காமல் மோசடியாளர்களிடம் ஒப்படைக்க அதிகாரிகள் முயற்சிப்பதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## கிளிநொச்சியில் 29 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலை பகுதியில் 29 கிலோ 150 கிராம் கஞ்சாவுடன் அன்றைய தினம் சனிக்கிழமை (நவ 26) இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கி கப் ரக வாகனத்தில் கஞ்சா ஏற்றி வருவதாக பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, முகமாலை பகுதியில் வைத்து 29 கிலோ 150 கிராம் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த அளவிலான கஞ்சா சூட்சுமமான முறையில் கப் ரக வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குலரத்ன தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தீவிர சோதனையின்போதே கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கைதான சந்தேக நபர்கள் அன்று(26) கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வடமாகாணத்தில் 551 பேருக்கு 9 ”ஏ” தர சித்தி

2021ஆம் ஆண்டின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் 551 மாணவர்கள் 9 பாடங்களிலும் "ஏ" தர சித்தியை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இருந்து 16 ஆயிரத்து 564 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையிலேயே 551 மாணவர்கள் 9 பாடங்களிலும் "ஏ" தரத்தில் சித்தியை பெற்றுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 3 ஆயிரத்து 9 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 193 மாணவர்கள் 9 பாடங்களிலும் "ஏ" தரத்தில் சித்தியடைந்துள்ளனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 56 பேருக்குக்கும், வடமராட்சி கல்வி வலயத்தில் 56 பேருக்கும், வலிகாமம் கல்வி வலயத்தில் 53 பேருக்கும், கிளிநொச்சி கல்வி வலயத்தில் 49 பேருக்கும்,முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 47 பேருக்கும், மன்னார் கல்வி வலயத்தில் 39 பேருக்கும், தென்மராட்சி கல்வி வலயத்தில் 36 பேருக்கும், வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 12 பேருக்கும் துணுக்காய் கல்வி வலயத்தில் 9 பேருக்கும் தீவக கல்வி வலயத்தில் ஒருவருக்கும் 9 "ஏ" சித்தி கிடைத்துள்ளது.



# சினிமா துளிகள்



## வாரிசு படத்தில் இணையும் சிம்பு



வாரிசு இந்த பொங்கல் விருந்தாக திரைக்கு வரவுள்ளது. இப்படத்தின் பர்ஸ்ட் சிங்கள் ஏற்கனவே வெளிவந்து செம ஹிட் அடித்துள்ளது. எங்கு திரும்பினாலும் ரஞ்சிதமே சாங் பட்டித்தொட்டியெல்லாம் கலக்கி வருகின்றது.

இந்நிலையில் வாரிசு படத்தில் ஒரு பாடலை சிம்பு பாடவுள்ளதாக ஒரு தகவல் கிடைத்துள்ளது. இதற்கான பேச்சு வார்த்தைகள் தொடங்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அப்படி இது உண்மை என்றால், விஜய்க்கு முதன் முறையாக சிம்பு இந்த பாடலை பாடுவது குறிப்பிடத்தக்கது.

## எல்லோர் முன்பும் கதறி அழுத நடிகை பிரியா வாரியர்




ஒரு அடர் லவ் படத்தின் டீசரில் பிரியா வாரியர் கண்ணடிக்கும் சீன் ஒரே நாளில் இந்தியா முழுவதும் வைரல் ஆனதால் அவர் பெரிய அளவில் பிரபலம் ஆனார். அதற்குப்பிறகு அந்த படம் தியேட்டர்களில் வெளியான நிலையில் பெரிய பிளாப் ஆனது. அதனால் அதற்கடுத்து பிரியா வாரியருக்கு எந்த படமும் பெரிதாக கிடைக்கவில்லை, வாய்ப்பு கிடைத்து நடித்த படங்களும் ரிலீஸ் ஆகவில்லை.

இந்நிலையில் தற்போது பிரியா வாரியர் ஹீரோயினாக நடித்து இருக்கும் 4 இயர்ஸ் என்ற படத்தின் ஸ்பெஷல் ஷோ போடப்பட்டு இருக்கிறது. என்ஜினியரிங் கல்லூரி காதல் ஜோடி பற்றிய கதை இது என்பதால் தான் 4 years என படத்திற்கு பெயர் வைத்து இருக்கின்றனர். இந்த படத்தை திரையில் பார்த்துவிட்டு வெளியில் வரும்போது பிரியா வாரியர் கதறி கதறிஅழுதிருக்கிறார். இது ஆனந்த கண்ணீர். அந்த படத்தின் ஹீரோ அவரது கண்ணீரை துடைத்துவிட்டு சமாதானப்படுத்தி இருக்கிறது.

## ஆஸ்கர் விருது வாங்கும் விருப்பம் எனக்கு இல்லை – நடிகர் எஸ்.ஜே.சூர்யா

அஜித் நடித்த வாலி, விஜய்யின் குஷி ஆகிய வெற்றி படங்களை இயக்கி பிரபலமான எஸ்.ஜே.சூர்யா, பின்னர் கதாநாயகனாக நடிக்க தொடங்கினார்.

தற்போது அவருக்கு பல படங்களில் வில்லன் வேடங்கள் குவிகின்றன. சமீபத்தில் வெளியான மாநாடு, டான் படங்களில் நடித்த எஸ்.ஜே.சூர்யாவின் நடிப்பு அனைவராலும் பாராட்டப்பட்டது.



மேலும் இவர் கைவசம் தற்போது "பொம்மை", "மார்க் ஆண்டனி" மற்றும் "ஆர்சி 15" படங்கள் உள்ளது. தொடர்ந்து இவர் ஆண்ட்ரூ லூயிஸ் இயக்கத்தில் "வதந்தி" எனும் புதிய வெப் தொடரில் நடித்துள்ளார். எஸ்.ஜே.சூர்யா புஷ்கர் – காயத்ரி தயாரித்துள்ள இந்த வெப் தொடர் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி என ஐந்து மொழிகளில் உருவாகியுள்ளது.

இதையடுத்து வதந்தி படக்குழு மாலை மலர் நேயர்களுக்காக பிரத்யேகமாக பேட்டி அளித்தார். வதந்தி படம் குறித்தும் அவர்களின் சினிமா பயணம் குறித்தும் பல விஷயங்களை பகிர்ந்துள்ளார்.

இதில் நடிகர் சூர்யா, "போய் சேர வேண்டிய இடம் நூறு என்றால் நான் 15 கிலோ மீட்டர் மட்டுமே கடந்திருக்கிறேன். எனக்கு ஆஸ்கர் விருது வாங்குவது தேசிய விருது வாங்குவது இவைகளில் விருப்பம் இல்லை. எஸ்.ஜே.சூர்யா நடித்தால் அதை உடனே பார்க்க வேண்டும் என்ற ஒரு எண்ணத்தை உருவாக்க வேண்டும். அந்த அன்பை மக்களிடம் அவர்களிடம் இருந்து வாங்க வேண்டும்" என்று பல விஷயங்களை பகிர்ந்துள்ளார்.

## உலகளவில் லவ் டுடே திரைப்படம் மொத்தமாக செய்துள்ள வசூல்!

சமீபத்தில் வெளியாகி ஒட்டுமொத்த தமிழ் திரையுலகையே திரும்பி பார்க்க வைத்த திரைப்படம் லவ் டுடே.



பிரதீப் ரங்கநாதன் நடித்து இயக்கியுள்ள லவ் டுடே திரைப்படம் இளைஞர்கள் மத்தியில் பெரிய வரவேற்ப்பை பெற்று வசூல் சாதனைகளை படைத்து வருகிறது.

அந்த வகையில் தமிழகத்தில் மட்டும் தற்போது வரையில் லவ் டுடே திரைப்படம் ரூ. 55 கோடி-யை வசூல் செய்திருக்கிறது. மேலும் இப்படம் தெலுங்கிலும் டப் செய்யப்பட்டு ரிலீஸாக இருக்கிறது.

இந்நிலையில் தற்போது லவ் டுடே திரைப்படம் உலகளவில் மொத்தமாக செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியிருக்கிறது. ஆம், லவ் டுடே திரைப்படம் உலகளவில் கிட்டதட்ட ரூ. 70 கோடி அளவில் வசூல் செய்திருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

மேலும் தெலுங்கில் வெளியாகி இப்படம் வரவேற்பை பெற்றால் ரூ. 75 கோடி-யை கடந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு அறிமுக நடிகரின் திரைப்படம் இந்தளவு வசூல் செய்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## சமந்தாவுக்கு வந்த இன்னொரு சிக்கல்!



நடிகை சமந்தா தனக்கு மயோசிட்டிஸ் என்ற நோய் வந்திருக்கிறது என சமீபத்தில் அறிவித்து எல்லோருக்கும் ஷாக் கொடுத்தார். மேலும் அவர் உடல்நிலை மோசமான நிலையிலும் யசோதா படத்தின் டப்பிங் பணிகளை முடித்து கொடுத்து ரிலீஸ் செய்தார்.

அந்த படமும் கடந்த நவம்பர் 11ம் திகதி திரைக்கு வந்து வரவேற்பை பெற்றது. சுமார் 30 கோடி வரை வசூலும் பெற்றது.

படத்திற்கு எதிராக வழக்கு

யசோதா படத்தில் சமந்தா EVA surrogacy clinicல் சேர்வது போலவும், அந்த ஹாஸ்பிடல் பல சட்டவிரோத வேலைகளை செய்வது போலவும் காட்டப்பட்டு இருந்தது.

இந்நிலையில் ஹைதராபாத்தில் இருக்கும் நுஏயு ஐஏகு உழளிவையட தற்போது வழக்கு தொடர்ந்து இருக்கிறது. தங்கள் மருத்துவமனையின் பெயரை கெடுத்துவிட்டார்கள் என குறிப்பிட்டு இருக்கின்றனர்.

இந்த வழக்கு தற்போது ஹாஸ்பிடலுக்கு சாதகமாக இருப்பதால், யசோதா படம் ஓடிடியில் வெளியாவதில் சிக்கல் வந்திருக்கிறது.

## சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார் நடிகர் கமல்ஹாசன்

நடிகர் கமல்ஹாசன் இந்தியன்-2 படப்பிடிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இதற்கிடையில் தனியார் டி.வி. தொலைக்காட்சி நிகழ்ச்சியிலும் பங்கு பெற்று வருகிறார். இதுமட்டுமல்லாமல், கட்சி பணியிலும் தொடர்ந்து ஈடுபடுகிறார். கடந்த 3 நாட்களுக்கு முன்பு ஐதராபாத் சென்ற நடிகர் கமல்ஹாசன், அங்கு இயக்குனர் விஸ்வநாத்தை சந்தித்தார்.

மேலும் அங்கு சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, சென்னை திரும்பினார். கமல்ஹாசன் இதைத்தொடர்ந்து அவருக்கு திடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் சென்னை போரூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வந்தனர்.

மேலும், காய்ச்சல் காரணமாக சிகிச்சை பெற்று வரும் கமல்ஹாசன் நலமாக உள்ளதாகவும், ஓரிரு நாட்களில் வீடு திரும்புவார் என்றும் மருத்துவமனை நிர்வாகம் அறிக்கையின் வாயிலாக தெரிவித்திருந்தது.

கமல்ஹாசன் இந்நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நடிகர் கமல்ஹாசன் சிகிச்சை முடிந்து இன்று வீடு திரும்பினார். இவரை வீட்டிலேயே ஓய்வில் இருக்க மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.



# பசிலின் வருகையும், புத்துயிர் பெற்ற ராஜபக்ஷக்களும்



இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான ராஜபக்ஷக்களின் எழுச்சி என்பது அவர்களை இன்றைய அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக நிற்கவைத்துள்ளது. அத்துடன் இலங்கையின் பாரம்பரியக் கட்சிகளாகவிருந்து பெரும் பதவிகளை வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளை ஓரங்கட்டவைத்துள்ளது. சிதைத்து சின்னாபின்னமாக்கியுள்ளது. இவர்களின் எழுச்சி ஏனைய தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது.

தென்னிலங்கை சிங்கள மக்களால் அரசர்களாக தூக்கி நிறுத்தப்பட்ட ராஜபக்ஷ க்கள் பின்னர் குடும்ப அரசியலின் காரணமாகவும் நாட்டை நிர்வகிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களின் நிமித்தமாகவும் ராஜபக்ஷ க்களை நாட்டிலிருந்து ஓட ஓட விரட்டவும் செய்தனர். இந்த ராஜபக்ஷ தரப்பினரை அரசியலில் நிலைநிறுத்த தமக்கென ஒரு கட்சியை உருவாக்குவதில் மூலகர்த்தாவாக இருந்தவர் தான் இந்த பசில் ராஜபக்ஷ. அவரை மீறி பொதுஜன பெரமுனவுக்குள் எதனையும் செய்ய முடியாது. அவர் கூறுவதைத்தான் அனைவரும் கேட்கவும் வேண்டும். அவர் தான் திட்டங்களையும் வகுக்கக்கூடிய பொறுப்பில் இருக்கிறார். தக்க சமயத்தில் உள்நுழைந்து ராஜபக்ஷக்களைக் காப்பாற்றுபவரும் அவரே.

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் தோற்றபோது இரட்டைப் பிரஜாவுரிமையை வைத்துள்ள பசில் ராஜபக்ஷ அவர்கள் உடனடியாக தாய் நாட்டைவிட்டு அமெரிக்கா பறந்தார். அமைச்சராகவும் இருந்து செயற்பட்டவர். அப்போது அவர் மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

நல்லாட்சி என்கிற அரசாங்கம் உட்கட்சிப் பிரச்சினைகளால் இழுபறியில் தனது ஆட்சியை மெதுமெதுவாக நகர்த்தியபோதெல்லாம் வெளிநாட்டில் இருந்து தனது எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வந்த பசில், தனக்கான நேரம் வரும் வரை காத்திருந்து, காரியங்களைச் செயற்படுத்தும் ஒருவராக தென்னிலங்கை அரசியலில் அறியப்படுகிறார். தனக்கென தன்னுடைய கட்சியான பொதுஜன பெரமுனவுக்குள் ஒரு கூட்டம் இருக்கிறது. பெரும்பான்மை உறுப்பினர்கள் பசிலின் ஆதரவாளர்கள். அவரை நம்பித்தான் இன்று அக்கட்சி இருக்கிறது. வெளிநாடு சென்றுவிட்டு மீண்டும் தாய்நாடு திரும்பும் பசிலால் எப்போதும் அக்கட்சிக்குள் உற்சாகம் தொற்றிக்கொள்ளும். அவர் நாடு திரும்பினால் அக் கட்சிக்குள்ளும், அரசியலிலும் மாற்றங்கள் நிகழும் என்பது தென்னிலங்கை ராஜபக்ஷ க்களின், அவர்களின் ஆதரவாளர்களின் அசராத நம்பிக்கை.

இந்நிலையில் தான் அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக மாற்றி அழகு பார்க்கவேண்டும் என பொதுஜன பெரமுன தரப்பினர் விரும்பி பெரும்பான்மைப் பலத்துடன் அவரை வெற்றிபெற வைத்தனர். இதற்குப் பின்னால் பசில் ராஜபக்ஷ அவர்களின் செயற்பாடுதான் இருந்தது. தன் மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்த போதும் அனைத்திலிருந்தும் வெளிவரும் வகையில் தனக்கான காய்களை நகர்த்தியிருந்தார். பதவியை இழந்திருந்த ராஜபக்ஷக்கள் தரப்பு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் ஆளுக்கொரு பதவியில் மீண்டும் வந்தமர்ந்தனர். மீண்டும் குடும்ப அரசியல் தலையெடுக்க ஆரம்பித்தது.

இம்முறை கடந்த காலங்களைப் போலல்லாது கொவிட் பரவலின் பின்னரான இலங்கையின் பொருளாதாரம் கடுமையாகப் பாதித்திருந்தது. பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஆதரவுடன் அரியணையில் இருந்த பொதுஜன பெரமுனவால் மக்களின் குறைகளைத் தீர்க்க முடியவில்லை. நாட்டின் அரசியலை நிலையாகப் பேண முடியவில்லை. விலைவாசிகள் அதிகரித்ததால் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட ஆரம்பித்தனர். ராஜபக்ஷக்களை உடனடியாகப் பதவி விலகுமாறு வலியுறுத்தினர். ஜனாதிபதிச் செயலகம், பிரதமர் அலுவலகம் என்பன மக்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது. வாகனங்கள் தீ வைக்கப்பட்டது. ராஜபக்ஷ அணியினரை மக்கள் ஓட ஓட விரட்டியடித்தனர். பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் வீதிகளில் நடமாட முடியாமல் வீடுகளுக்குள் கூட பதுங்க முடியாமல் மாற்று இடங்களைத் தேடி ஒழிந்தனர்.

இச் சூழலில் தான் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு தப்பியோடி வெளிநாடொன்றில் இருந்து தனது பதவி விலகல் கடிதத்தை அனுப்பிவைத்தார். இராஜினாமாவை ஏற்றுக்கொண்டு பாராளுமன்றம் ஊடாக இன்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியில் அமர்ந்துள்ளார். தினேஸ் குணவர்த்தன பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். பசில் ராஜபக்ஷவுக்கு நீதிமன்றம் வெளிநாடு செல்ல தடைவிதித்திருந்த போதும் பின்னர் அது நீக்கப்பட்டு அமெரிக்கா பறந்தார்.

எனினும் தற்போதைய ஆட்சியின் பின்னணியில் இருப்பதும் பொதுஜன பெரமுன அணியினர் தான். அவர்கள் தான் இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்த ரணில் அவர்களை தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர். அவருக்கான பெரும்பான்மைப் பலத்தை பாராளுமன்றில் தக்கவைத்துக்கொண்டுள்ளனர். அவர்கள் கூறுவதைத் தான் ரணில் அவர்கள் செவிமடுத்து செயற்படுத்தி வருகின்றார். ராஜபக்ஷ தரப்பினரை பகைத்துக்கொண்டு ரணில் அவர்களால் சுயமாக ஜனாதிபதி பதவியில் இருந்து செயற்பட முடியாது. அவர்களின் பிடிக்குள் சிக்குண்டு ராஜபக்ஷ க்களை பாதுகாக்கும் பணியை திறம்பட செய்துவரும் ஒருவராக ரணில் இன்று நாட்டு மக்கள் மத்தியில் அறியப்படுகிறார். தென்னிலங்கையின் ஏனைய அரசியல்வாதிகளும் ரணில் அவர்களை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இராணுவத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஜனநாயகப் போராட்டங்களை அடக்கியொடுக்கி அடுத்த தேர்தலில் ராஜபக்ஷ க்கள் பதவியைப் பிடிக்கும் வரைக்கும் அவர்களுக்கான வேலியாக தனது ஜனாதிபதிப் பதவியினை ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பயன்படுத்தி வருகின்றார் என்கிற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

எனினும் தற்போது மீண்டும் நாடு நோக்கி பசில் ராஜபக்ஷ வருகை தந்துள்ளார். அவர் வந்த கையோடு ஓடோடிச்சென்று அவர் சார்ந்த ஆதரவாளர்கள் அவரை வரவேற்று மகிழ்ந்துள்ளனர். ஏற்கனவே மக்கள் மத்தியில் சரிந்துபோயுள்ள தமக்கான ஆதரவினை இருக்கக்கூடிய ஓரிரு வருடங்களில் சரிசெய்து தேர்தல் ஒன்றினை எதிர்நோக்கி மீண்டும் ராஜபக்ஷக்களின் பலம் என்ன என்பதை நிரூபிக்கும் வகையில் செயற்படுவதே அவரது எதிர்கால திட்டமாக இருக்க முடியும். அதனை நோக்காகக் கொண்டுதான் திடீரென போன வேகத்தில் மீண்டும் நாட்டுக்கு வருகை தந்துள்ளார். அவரால் தான் இந்த வேலையினைச் சரிவர செய்யமுடியும். எதிர்த் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கவும் முடியும். பேச்சுவார்த்தைகளை அவர்களுடன் முன்னெடுக்கவும் முடியும்.

**பசிலின் வருகை தென்னிலங்கையின் பொதுஜன பெரமுன கட்சிக்கும், ராஜபக்ஷ தரப்பினருக்கும் புது உத்வேகமாகவே அமையும். அவரது தலைமையில் தான் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் தேர்தல், கூட்டணி, பிளவு, சூழ்ச்சி, சேர்ப்பு என்பன இடம்பெறும்.** இன்றைய சூழலில் மக்கள் ராஜபக்ஷக்களுக்கு மாத்திரமல்ல ஏனைய சிங்கள அரசியல்வாதிகளையும் வெறுக்கும் அளவிற்கு மாறியுள்ளனர். தேர்தல் ஒன்றுக்கு மக்கள் முகங்கொடுக்கத் தயாராக இல்லை. இந்நிலையில் மீண்டும் மக்கள் மத்தியில் பலம் பெறும் தரப்பாக தம்மை மாற்றவேண்டிய தேவை ராஜபக்ஷக்களுக்கு இருக்கிறது. அவர்களின் எதிர்காலப் பாதுகாப்பும் அரசியல் இருப்பையும் உறுதிப்படுத்தி தமது எதிர்காலச் சந்ததிகளிடம் பதவிகளை ஒப்படைக்க ராஜபக்ஷ தரப்பு துடிக்கிறது.

ஏற்கனவே நாட்டைவிட்டுத் தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பலத்த ஆதரவுடன் பாதுகாப்பாக நாட்டுக்கு வருகை தந்து தற்போது மெதுமெதுவாக பொது நிகழ்ச்சிகளுக்கு தனது முகத்தைக் காட்டி வருகிறார். அதேபோல், ராஜபக்ஷக்களுக்கு பின்னால் இருந்து முதுகெலும்பாகச் செயற்படும் நபரான பசில் ராஜபக்ஷவின் நாட்டிற்கான மீள்வருகை எதிர்காலத்தில் எவ்வாறு அமையப்போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**சசிகரன்**

# பொய்த்துப்போன மழையும், துன்பத்தில் விவசாயிகளும்

விவசாய நாடான இலங்கையில் பாரம்பரியமாக நெற்பயிர்ச்செய்கையினை பிரதானமாக மூவின மக்களும் செய்து வருகின்றனர். இவர்களால் தான் கடந்த காலங்களில் நாட்டினது அரசித் தேவை பூர்த்திசெய்யப்பட்டு வந்தது. எனினும் அரசின் முறையற்ற திட்டங்களால் விவசாயம் பெரும் பாதிப்பினை இன்று எதிர்கொண்டுள்ளது. இதனால் விவசாயிகள் விவசாயத்தை கைவிடும் அளவிற்கு நிலைமை மிக மோசமாகியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து அரசியினை இறக்குமதி செய்யும் நிலையில் இன்றைய அரசு இருக்கிறது. உர இறக்குமதித் தடை கடந்த காலங்களில் விவசாயத்தை பாதிப்படையச் செய்தது. உணவு உற்பத்தி கணிசமாக வீழ்ச்சியடைந்தது. உள்ளூரில் விலை வாசியும் அதிகரித்தது.


இவற்றையெல்லாம் தாண்டி விவசாயிகள் காலங்காலமாக பல இன்னல்களுக்கு மத்தியில் நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர். இம்முறை ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு விவசாயிகளுக்கான உரத்தினை இறக்குமதி செய்து விநியோகம் செய்கின்றபோதிலும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் உரம் வாங்கிப் பயன்படுத்த வேண்டிய தேவை விவசாயிகளுக்கு இருக்கிறது. கஷ்டங்களைப் பாராது இம்முறை விவசாயிகள் உரம், மருந்தினைப் பெற்று பயன்படுத்தியுள்ளபோதிலும், போதிய உரம் கிடைக்காமலும், பணம் இல்லாத சூழலில் விதைத்த விவசாயிகள் துன்பப்படுவதையும் காண்கிறோம்.

மனித நடவடிக்கைகளால் பூமியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காலநிலையினையும் விட்டுவைக்கவில்லை. காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் மழை கிடைக்கவேண்டிய நேரத்தில் நெற்பயிர்ச்செய்கைக்கான மழை இல்லாமல் போயுள்ளது. மழையினை நம்பி நெற்பயிர்ச்செய்கையினை மேற்கொண்டிருக்கும் விவசாயிகள் வானத்தைப் பார்த்து தினம் தினம் ஏமாற்றமடைகின்றனர். உரத்தினையும் மருந்தினையும் முறையாகப் பயன்படுத்த முடியவில்லை. உரிய நேரத்தில் காலநிலை சாதகமாக இல்லை. மனித நடவடிக்கைகளால் இயற்கை நிலைகுலைந்து போயுள்ளது. குளத்தினை நம்பி விவசாயம் செய்தவர்களின் வயல்களில் நீர் இருப்பதையும், மழையினை நம்பி விவசாயம் செய்திருப்பவர்களின் வயல்கள் காய்ந்து வரண்டுபோயிருப்பதையும் காண முடிகிறது.

பலர் உரத்தினை எடுத்துவைத்துவிட்டு மழைக்காகக் காத்திருக்கின்றனர். வயலில் தண்ணீர் இல்லாமல் நெற்கதிர்கள் நிற்பதையிட்டு கவலை கொள்கின்றனர். கடந்த காலங்களைவிட இம்முறை நெற்பயிர்ச்செய்கைக்காக பெருமளவு பணம் போடப்பட்டுள்ளது. உழுவதற்கான பணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கிருமிநாசினிகளின் விலை அதிகரித்துள்ளது. போதிய விளைச்சல் கிடைக்காது விடின் ஏற்கனவே பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நாம் மேலும் துன்பப்படவேண்டிய நிலை வரும். அரிசியின் விலைகள் சடுதியாக எதிர்காலத்தில் அதிகரிக்கலாம். உள்ளூரில் உற்பத்தியினை அதிகரிக்காமல் இறக்குமதிகளை நம்பி வாழ்க்கையினை நடாத்த முடியாது என்பது உண்மை.

மழை கிடைக்கவேண்டிய நேரத்தில் கிடைக்காமல் நெற்கதிர்கள் திடீரென கிடைக்கும் மழையை நம்பி வளர்ந்து பின்னர் பெய்யும் கடும் மழைக்கு சிக்கவேண்டிய நிலை வரலாம் என அச்சம் தெரிவிக்கின்றனர். விளைச்சல் குறைவாகக் கிடைக்கவும் வாய்ப்பு இருக்கும் என்கின்றனர். ஏற்கனவே பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வயலை விதைக்கும் விவசாயிகள் தொடர்ச்சியாக இயற்கையாலும் ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

# நகைச்சுவை துணுக்குகள்



டாக்டர்: "நீங்க உடம்பைக் குறைக்கனும் இனிப்பைக் குறைக்கனும் காரத்தைக் குறைக்கனும்"

நோயாளி: "டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கனும்"

கணவர்: இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்கால், ஒரு நாள் மிருகமா மாறப் போறேன். ஜாக்கிரதை.

மனைவி: நான் எலியைப் பார்த்தெல்லாம் பயப்பட மாட்டேன்!

என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?"

"ரெண்டாவது "ஷாக்" எதுக்குன்னு, தான்..!"

கேர்ள்: எக்ஸாம் டைம்"ல நாங்க டி.வீ, ரேடியோ, கம்ப்யூட்டர், செல்போன் தொடவே மாட்டோம்...
பாய்: இவ்வளவு தானா? நாங்க புக்கையே தொட மாட்டோம்.

முடியாது முடியாது..
சில விஷயத்தை மாத்த முடியாது
காலிஃப்ளவர் தலைக்கு
வைக்க முடியாது.
கவரிங் கோல்டு அடகு
வைக்க முடியாது.
கோல மாவில்
தோசை சுட முடியாது.
வீணாப் போன குறுஞ்செய்தி
வந்தாலும்
உன்னால படிக்காம இருக்க முடியாது

# வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில், வவுனியாவில் மாவீரர் நாள் நினைவேந்தல்!

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு,
ஊடக அறிக்கை
2022 நவம்பர் 27

2022 நவம்பர் 27 ஞாயிற்றுக் கிழமை அன்று, வழமை போன்றே இம்முறையும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில், வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் மாவீரத் தெய்வங்களுக்காக பிரத்தியேகமாக அமைக்கப்படும் திருக்கோவிலில் ஆலய மணியோசை மூன்று முறை ஒலிக்க விடப்பட்டு, மாவீரர் உறுதியுரை கீதம் இசைக்க மாலை 6 மணி 5 நிமிடத்துக்கு மாதிரிக் கல்லறைகளுக்கு முன்பாக பொதுச்சுடர் ஏற்றலுடன் மண்டப நிகழ்ச்சியாக "தமிழீழ தேசிய மாவீரர் நாள் நினைவேந்தல்" இடம்பெறும்.

குறிக்க நினைவேந்தல் எழுச்சியில், மாவீரர் போராளி குடும்பங்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், தமிழ் இனமான உணர்வாளர்கள், சிவில் சமூக மனித உரிமை செயல்பாட்டாளர்கள் அனைவரையும் பங்கேற்று, "தமிழ் தேசிய இனத்தின் வீர ஆத்மாக்களுக்கு" உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்துமாறும், தாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து நினைவேந்தல் இடம்பெறும் கிட்டிய தூரத்திலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்கு முடிந்தவரை நேரில் வருகை தருமாறும் அழைக்கின்றோம்.

கூடவே "எனது மொழி தமிழ், எனது பிறப்பு தமிழன் – தமிழிச்சி" என்று உணருக்கின்ற ஒவ்வொரு தமிழ் பிரஜையையும், நவம்பர் 27 அன்று மாலை 6 மணி 5 நிமிடத்துக்கு தத்தமது இல்லங்களின் வாசல்கள் தோறும் "நெய் விளக்கேற்றி மண்ணுறங்கும் மாவீரத்தை" கட்டி எழுப்பி கௌரவப்படுத்தும் தேசிய பெரும் பணியை ,தேசியக் கடமையை, "தரம் தாழ்ந்து போகாது சிரம் உயர்த்தி" நிறைவேற்றுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

உண்மையாய், உரிமையாய், உணர்வாய்,
மக்கள் நலப்பணியில்,
வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவினர்

# வாழ்க்கை தத்துவங்கள்

பிறருக்கு துன்பம் ஏற்படாத வகையில் உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

இன்றைய சிறப்பான செயல்பாடுகளே, எதிர்கால வாழ்க்கைக்கு ஆணி வேராக இருக்கிறது.

ஆரோக்கியமான வாழ்க்கையே உறுதியான வாழ்க்கை.

நன்றி உள்ளவனே நல்லவன். தன்னை உணர்ந்தவன். ஒருவர் செய்த நன்றியை மறப்பது பாவத்திலும் பாவம்.

உன் பலவீனம் தான் உன்னை அசுரத்தன்மை உள்ளவனாகவும், கோபக்காரனாகவும் மாற்றுகிறது. அதை அறிந்து துரத்தி விடு.

நல்லவர் நட்பை விட சிறந்த துணை வேறில்லை. நேர்மையாக நடப்பதைக் காட்டிலும் சிறந்த வழிபாடு இல்லை.

விதிப்படி இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. நடப்பதைக் கண்டு கலங்காதே. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று கருது.

நாளை பார்த்துக் கொள்ளலாம் என நற்செயலை ஒத்தி போடாதே. உடனே அக்கறையுடன் அதில் ஈடுபடு.

பெற்றோரை காட்டிலும் சிறந்த தெய்வம் இல்லை. நேர்மையைக் காட்டிலும் சிறந்த வழிபாடு இல்லை.





# பல்சுவை கதம்பம்



## குளிர்கால நோயை தடுக்கும் நெல்லிக்காய்..


குளிர் காலத்தில் வரும் ஒரு சில நோய்களை தடுக்க உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் தேவை என்றும் அந்த நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருப்பதால் அதை சாப்பிட வேண்டும் என நமது முன்னோர்கள் கூறி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குளிர்காலத்தில் எளிதாக பல்வேறு நோய்கள் வரும் என்பதும் அந்த நேரத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க நெல்லிக்காய் சாப்பிட வேண்டும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

நெல்லிக்காய் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருப்பதால் அது குளிர்காய குளிர்கால நோயை தடுத்து உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை பலப்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது

நெல்லிக்காயில் பைட்டோ நியூட்ரியன்கள் மற்றும் ஆன்டி ஆக்ஸிடண்ட்கள் அதிகம் உள்ளது. இதனால் மூளை செல்கள் தாக்கப்பட்டால் அது எதிர்த்து போராடும் தன்மை கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது

மேலும் நெல்லிக்காய் வைட்டமின் சி சத்து அதிகம் கொண்டுள்ளதால் நினைவு திறனை அதிகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. நெல்லிக்காய் மிட்டாய் நெல்லிக்காய் ஜுஸ் நெல்லிக்காய் ஊறுகாய் என நெல்லிக்காயை பல்வேறு வகைகளில் சாப்பிடலாம்





## ஏசியில் அதிக நேரம் இருந்தால் முடி கொட்டுமா?

இன்று பெரும்பாலானவர்களுக்கு இருக்கும் பிரச்சனைகளில் ஒன்று தான் முடி கொட்டுதல். இந்த நிலையில் நமது உணவு பழக்க வழக்கம் மற்றும் நடைமுறை பழக்கவழக்கங்கள் தான் முடி கொட்டுவது காரணம் என்று கூறப்படுவது.

குறிப்பாக ஏசியில் அதிக நேரம் இருந்தால் கூந்தல் நுனியில் வெடிப்பு பொடுகு தொல்லை ஏற்படும் என்றும் முடி கொட்டுதலுக்கு ஏசியில் பலமணி நேரம் இருப்பதும் ஒரு முக்கிய காரணம் என்றும் கூறப்படுகிறது

முடி உதிர்தல் சரும நோய் உள்ளிட்ட உடல் உபாதைகள் மன அழுத்தமும் ஒரு காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

உடல் பராமரிப்பு மீதான அக்கரை மற்றும் விழிப்புணர்வு தற்போது அதிகரித்து வரும் நிலையில் அதிக நேரத்தில் ஏசியில் இருப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் அதனால் கூந்தல் மட்டுமின்றி உடல் ஆரோக்கியம் சீர்படும் என்றும் கூறப்பட்டு வருகிறது

நம் முன்னோர்கள் இயற்கையாக வாழ்ந்து கொண்டிருந்த போது எந்த விதமான உடல் பிரச்சனையும் இல்லாமல் வாழ்ந்தார்கள். ஆனால் நாம் செயற்கை முறையில் பல்வேறு வசதிகளை செய்து கொண்ட பின்னர்தான் முடிகொட்டுதல் உள்பட பல பிரச்சனைகள் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

**முகத்தில் தோன்றும் கரும்புள்ளிகளை வீட்டில் இருக்கும் பொருட்கள் கொண்டே அகற்ற முடியும். இவை குறித்து ஹோம் டிப்ஸ் இதோ...**

**எலுமிச்சை சாறுடன், வெள்ளை சர்க்கரை சேர்த்து முகத்தில் தேய்த்து 2 – 3 நிமிடங்கள் மசாஜ் செய்யலாம்.**

**உருளைக்கிழங்கை பேஸ்ட் போல அரைத்து 15 நிமிடங்கள் வரை முகத்தில் வைத்திருந்து குளிர் நீரில் கழுவலாம்.**

**கொத்தமல்லி தழையுடன் மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து முகத்தில் தடவி சிறிது நேரத்திற்கு பின்னர் கழுவலாம்.**

**வெறும் எலுமிச்சை சாறினை எடுத்து பஞ்சில் நினைத்து முகத்தில் தேய்த்து 5 – 6 நிமிடங்கள் வைத்து பின்னர் கழுவலாம்.**

**தயிர் மற்றும் எலுமிச்சை சாறை கலந்து தடவி வரலாம்.**

**வெந்தயக்கீரையை அரைத்து முகத்தில் தடவி காயும் வரை அப்படியே விட்டு பின்னர் கழுவ வேண்டும்.**

## சிறு வயதிலேயே இளநரை- தடுக்க என்ன செய்யலாம்

இன்றைய காலகட்டத்தில், இளம் வயதினரே வெள்ளை முடியால் மிகவும் சிரமப்படுகிறார்கள். இது சங்கடத்தையும் குறைந்த நம்பிக்கையையும் தருகிறது. இளம் வயதிலேயே வெள்ளை முடி என்பது மரபணு காரணங்களால் வரலாம். ஆனால் இது பொதுவாக நமது அன்றாட உணவுடன் தொடர்புடையது. ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடுவதன் மூலம் வெள்ளை முடி வளராமல் தடுக்கலாம்.

முடி பராமரிப்புக்கு பல ஊட்டச்சத்துக்கள் தேவைப்பட்டாலும், உடலில் விட்டமின் பி குறைபாடு இருந்தால், அது மோசமாகிவிடும். உடலில் விட்டமின் பி குறைபாடு ஏற்பட்டால், அதன் தாக்கம் நம் தலைமுடியில் தெரிய ஆரம்பிக்கிறது. இதனால் முடி வெள்ளையாக மாற ஆரம்பிக்கிறது. முடி உதிர்தல் பிரச்சினையும் தோன்றத் தொடங்குகிறது. இது பின்னர் வழுக்கையை ஏற்படுத்துகிறது. அதனால்தான் உங்கள் உணவு மற்றும் பானங்களில் இந்த விட்டமின் குறைபாட்டை அனுமதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நீங்களும் இளம் வயதில் முடி நரை பிரச்சனையை எதிர்கொண்டால், விட்டமின் பி, விட்டமின் பி6 மற்றும் விட்டமின் பி12 ஆகியவற்றை உட்கொள்ளுங்கள், இந்த ஊட்டச்சத்துக்கள் இல்லாததால், முடிக்கு ஒக்ஸிஜன் குறைந்து, முடி வெள்ளையாகத் தொடங்குகிறது.

விட்டமின் பி குறைபாட்டைப் போக்க, தினசரி உணவில் காளான்கள், பருப்பு வகைகள் மற்றும் சொக்லேட் ஆகியவற்றை உட்கொள்ள வேண்டும். இந்த பொருட்களில் தாமிரம் உள்ளது. இது முடி ஆரோக்கியத்திற்கு நல்லது. இது தவிர கறிவேப்பிலையும் நெல்லிக்காயும் கூந்தலுக்கு நன்மை பயக்கும்

## முகத்தை பளிச்சிட தக்காளியை வைத்து செய்யப்படும் அழகு குறிப்புகள்...!



பெரும்பாலான பெண்கள் முகத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கழுத்திற்கு கொடுப்பதில்லை. இதனால் கழுத்தில் கறுப்புக்கயிறு கட்டியது போல் கருவளையம் தோன்ற விடும். இதனை தக்காளி பேஸ்ட்டால் விரட்டி விடலாம்.தக்காளி முகத்தில் சுருக்கம் விழாமல் தடுக்கிறது. மேலும் இது தோல்களை பளபளக்க செய்கிறது.

பழுத்த தக்காளியை நன்கு பசைபோல விதையுடன் சேர்த்து அரைத்து, முகத்தில் தடவி, 20 முதல் 30 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் சருமத்தில் உள்ள எண்ணெய் பசை, கருமை நிறம் மறையும்.

தக்காளி குளிர்ச்சியானது. இதனுடன் வெள்ளரிச்சாறை சம அளவில் எடுத்து பஞ்சில் நனைத்து முகத்தில் தடவி. காய்ந்தவுடன் கழுவ வேண்டும். தொடர்ந்து செய்து வந்தால், பருக்களால் ஏற்பட்ட தழும்புகள் மறையும்.

தக்காளி சாறு அரை டீஸ்பூன் தேன்அரை டீஸ்பூன் சமையல் சோடா ஒரு சிட்டிகை இந்த மூன்றையும் கலந்து கொள்ளுங்கள். இந்த பேஸ்ட்டை கருவளையத்தின் மேல் பூசி 10 நிமிடம் கழித்து கழுவுங்கள். கருவளையங்கள் காணாமல் போகும்.

நீண்ட நாட்களாக முகத்தை சரிவர பராமரிக்காதவர்களின் முகத்திலுள்ள செல்கள் இறந்து போய் முகம் பொலிவிழந்து விடும். இப்படிப்பட்டவர்கள் ஒரு தக்காளியின் சாறுடன் கால் டீஸ்பூன் ரவையைக் நன்றாக கலந்து முகத்தில் தேய்த்து கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்.

## சர்க்கரை நோய் உள்ளவர்கள் பழங்கள் சாப்பிடலாமா?

சர்க்கரை நோய் உள்ளவர்கள் பழங்கள் சாப்பிடலாமா என்ற சந்தேகம் பலருக்கு இருக்கும் நிலையில் ஒரு சில பழங்கள் தவிர அனைத்து பழங்களையும் சாப்பிடலாம் என மருத்துவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

சர்க்கரை நோய் என்பது ஒரு நோய் அல்ல என்றும் அது ஒரு குறைபாடு என்றும் முறையான உணவு மற்றும் உடற்பயிற்சி மூலம் அந்த குறைபாட்டை வென்று விடலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

இந்த நிலையில் சர்க்கரை நோய் உள்ளவர்கள் புளிப்பு துவர்ப்பு சுவையுடைய பழங்களை சாப்பிடுவது உடலுக்கு நல்லது என்றும் அதிக இனிப்பு பழங்களை மட்டும் தவிர்க்கலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

நெல்லிக்காய், மாங்காய், நாவல் பழம் உள்ளிட்ட உணவுகளில் புளிப்பு, துவர்ப்பு சுவை உள்ளதால் இவைகளை சர்க்கரை நோய் உள்ளவர்கள் எடுத்துக்கொள்ளலாம் அதேபோல் பாகற்காய், வெந்தயம் போன்றவற்றில் கசப்பு சுவை உள்ளதால் இவற்றையும் சர்க்கரை நோய் உள்ளவர்கள் எடுத்துக்கொள்ளலாம். அதிக இனிப்பு பழங்கள் தவிர மற்ற அனைத்து பழங்களையும் சர்க்கரை நோய் உள்ளவர்கள் சாப்பிடலாம் என்றும் பழங்கள் சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு எதிரி அல்ல என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்



# "இலங்கையில் தமிழர்களின் பூர்வீகம் என்பது பெருங்கற்கால பண்பாட்டுடன் தொடர்புடையது"(நேர்காணல்)–பேராசிரியர் சி.பத்மநாதன்

**கடந்தவார தொடர்ச்சி...**

அதன் எதிரொலியாக கிழக்கிலங்கையிலே பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்திலே பல்வேறு தரப்பினரிடையேயும் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. பல்கலைக்கழகம் தான் இதற்கு புறநடையாக இருந்தது. அதற்கு வெளியில் இருந்தவர்கள் தான் அதிகமாக இவற்றிலே கவனம் கொண்டு தம்முடைய இருப்பிடங்களில். சென்று வழிபடுகின்ற ஆலயங்களில். வேறு இடங்களில் காணப்படுகின்ற எழுத்துப் பொறித்த கற்கள். வேறு பொருட்களை எல்லாம் படமெடுத்துக் காட்டத் தொடங்கினர். இதனால் தான் சடுதியாகவும். மிக வேகமாகவும் விரைவிலே தமிழ் பெயர்கள் பொறித்த மிகப் புராதனமான சின்னங்களை மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளிலும். திருகோணமலையிலும் இனங்காண முடிந்தது.

இதிலே சிறப்பம்சம் என்னவென்றால். எழுத்துப் பொறித்த சில தொல்பொருள் சின்னங்கள். பெருங்கற்கால பண்பாட்டிற்குரியனவாகும். கதிரவெளியில் ஒரு கல்மேசை இருப்பதாக முன்பு கூறினார்கள். ஆனால் அதை இப்போது காணவில்லை. குருநாகல் மாவட்டத்தில் பதிய கம்பளை என்னுமிடத்தில் ஒரு பிரமாண்டமான அளவுடைய பெருங்கற்கால பண்பாட்டுக் காலத்திற்குரிய கல்லறை காணப்படுகின்றது. நான்கு மாதங்களுக்கு முன்பு அதை நான் சென்று பார்த்த போது அதிலே தமிழ்ப் பிராமி வரி வடிவங்களும். ஐந்து தலை நாகம். நாக தந்த உருவங்கள். ஒருதலை நாக வடிவங்கள் எனப் பலவற்றை அவதானிக்க முடிந்தது. அடுத்து வெல்லாவெளியிலும். வாகரையிலும் ஈமக் கல்லறைகளை சுற்றிய இடங்களில் அடுக்கி வைக்கப்பட்ட கற்களிலும் எழுத்துக்களை. வாசகங்களை கண்டோம். ஒரு இடத்திலே பாம்பு வடிவமும் பொறிக்கப்பட்டிருந்தது. இவற்றிற்கு அப்பால் இபன்கட்டுவ என்னுமிடத்தில் பெருந்தொகையான கல்லறைகளை அகழ்வு செய்துள்ளார்கள். கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் அங்கு ஒரு விசாலமான பெருங்கற்கால பண்பாட்டு மக்களின் ஈமக்காடு அமைந்துள்ளது. அங்குள்ள கல்லறைகளின் சுவர்கள் அல்லது கற்பலைகளில் தமிழ் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருப்பதை காண முடிந்தது.

**கேள்வி–தமிழ் மொழியின் தொன்மை தொடர்பான தமிழ் நாட்டின் தொல்லியல் சான்றுகளுக்கும் இலங்கையில் காணப்படும் தொல்லியல் சான்றுகளுக்குமிடையேயான பொதுமைத் தன்மைகள்,வேறுபாடுகள் பற்றிக் கூறமுடியுமா?**

தமிழர் தொடர்பான பெருங்கற்கால பண்பாடு தமிழகத்திலிருந்து தான் இலங்கையில் பரவியது. மொழி. உற்பத்திமுறை. பயன்படுத்தும் உபகரணங்கள் ஆகியவற்றில் வேறுபாடு இல்லை. எழுத்து முறை தமிழ்நாட்டைப் போல இங்கும் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறித்த கலவோடுகள் பெருங்கற்கால பண்பாட்டு சின்னங்களோடு தான் காணப்படுகின்றன. பிரதானமான வேறுபாடு வழிபாட்டுச் சின்னங்கள். கட்டுமானங்கள் என்பனவற்றைப் பற்றியதாகும். கீழடியில் அகழாய்வு செய்தவர்கள் அங்கு வழிபாட்டுச் சின்னங்கள் இல்லை என்று சொல்கிறார்கள்.

இலங்கையில். கிழக்கிலங்கையிலும் ஏனைய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட சின்னங்கள் பெரும்பாலும் வழிபாடுகளோடு தொடர்புடையவை. நாக சிற்பங்கள் நாகருடைய வழிபாட்டுடன் தொடர்புடையவை. அதுபோல பெருங்கற்காலத்து கல்லறைகளில் நாகத் தலைகள். திரிசூலம் என்பனவும் இடையிடையே காணப்படுகின்றன. பௌத்த பள்ளிகளிலும்கூட நாக வடிவங்கள் காணப்படுகின்றன. ஐந்து தலை நாகம் காணப்படுகின்றது. அதேவேளை தூண் நிரைகள் சிலவற்றிலும் சிறிய அளவிலான நாக வடிவங்கள் காணப்படுகின்றன. இங்கு நான்கு வழிபாட்டு முறைகள் பற்றிய தமிழ்ப் பிராமியில் பொறிக்கப்பட்ட பண்பாட்டுச் சின்னங்கள் உள்ளன. நாக வழிபாடு. சைவ சமய வழிபாடு சார்ந்த லிங்கம். நந்தி போன்ற உருவங்கள். பௌத்த சமய வழிபாடு தொடர்பான புத்தர் வடிவங்கள். திருப்பாத வடிவங்கள் போன்றவற்றிலும் அவை காணப்படுகின்றன. அதுபோல முன்பு கூறியது போல சமண சமயம் சம்பந்தமான ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. இரண்டாவது வேறுபாடு கட்டுமானங்களைப் பற்றியதாகும். இலங்கையில் நாகர்கள் தூண் தாங்கு கற்கள் என்று சொல்லக்கூடிய வடிவங்களை பரவலாக பயன்படுத்தியுள்ளார்கள். இவை கற்பிட்டி முதல் பருத்தித்துறை வரையிலும். கந்தரோடை முதல் சங்கமன்கண்டி வரையிலும் காணப்படுகின்றது ஒரு விசேட அம்சமாகும். தூண் தாங்கு கற்கள் தமிழகத்தில் இருந்தமைக்கான சான்றுகள் வெளிவரவில்லை.அதுமட்டுமன்றி. பல்லவர்களுடைய கட்டுமானங்கள் கற்களில் உருவாவதற்கு முன்னரே இலங்கையில் நாகர்கள் சிற்பக் கலையிலும். கட்டிடக் கலையிலும் பெரும் சாதனைகளை ஈட்டியுள்ளார்கள். கற் தூண்கள் அமைந்த கட்டிடாங்கள் பல இலங்கையின் வடக்கு கிழக்கு பாகங்களில் அமைக்கப்பட்டிருந்தன.



பேராசிரியர். எஸ்.பத்மநாதன்

இலங்கையின் மத்திய பகுதியில் அநுராதபுரம் போன்ற பகுதியில் காணப்படுகின்ற ஆதியான கட்டுமானங்கள் நாகருடைய கலைப்பாணியில் அமைந்தவை. அதேபோல பிற்காலத்திலே அலங்கார வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்ட சந்திர வட்டக் கற்கள் என்னும் அமைப்புக்கள் நாகர்கள் தங்கள் கட்டிடங்களிலே வாயிற் கதவுகளாக வைத்த அரை வட்டக் கற்களை மூலமாகக் கொண்டவை.

மேலும் யாழ்ப்பாணத்தில் நவாலி.மாவிட்டபுரம்.வல்வெட்டித்துறை போன்ற இடங்களிலும் கல்முனை சேனைக்குடியிருப்பு தாந்தாமலை ஆகிய இடங்களிலும் தூண்களோடு கல்லினால் அமைந்த கட்டிடங்களை அமைப்பதற்கும் அவர்கள் பழகியிருந்தார்கள் என்று கொள்ள முடியும். அதுபோல இலங்கையிலே அதி உன்னதமான பழைய சிற்பம் என்று கருதப்படும் இசுறுமுனியாவில் உள்ள குதிரைத் தலையுடன் கூடிய ஐயநார் வடிவமும். நடனமாதர் சிற்பங்களும் சேருவிலவில் காணப்படும் அதி உன்னதமான அளவிலே பெரிய புத்தர் பெருமானின் கற்சிற்பங்களும் நாகர்களுடைய வேலைப்பாடு என்பது இப்போது தான் தெரியவந்துள்ளது.

**கேள்வி –யுனெஸ்கோவின் பாரம்பரிய கலாச்சார மற்றும் இயற்கை நினைவுச் சின்னங்கள் தொடர்பான வரையறைவுகள் எவை? இலங்கையில் அவ்வாறு ஏதாவது சின்னங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா? இலங்கையில் அவ்வாறான வரையறைக்குள் அடங்கக்கூடிய தமிழர் பாரம்பரிய, கலாச்சார மற்றும் இயற்கை நினைவுச் சின்னங்கள் எவையாக அமையலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்? அவ்வாறான அங்கீகாரத்திற்காக ஏதாவது முயற்சிகள் செய்யப்பட்டுள்ளனவா?**

யுனெஸ்கோவினால் பாதுகாக்கப்பட வேண்டியதென தீர்மானிப்பதற்கான சில பரிமாணங்கள் உண்டு. அவை பொதுவானவை. எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். யுனெஸ்கோ நிறுவனம் அரசாங்கங்களோடு தான் தொடர்பு கொள்வதுண்டு. தனியார் நிறுவனங்களோடோ. அல்லது நாட்டிலுள்ள பிராந்திய சபை. பிரதேச சபை ஆகியவற்றோடு தொடர்பு கொள்ளும் அதிகாரமும் வழக்கமும் இல்லை. அரசாங்கத்தினாலே சிபார்சு செய்யப்படுகின்ற தலங்களைத் தான் அவர்கள் பரிசீலனை செய்வர். இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில். அதனுடைய கலாசார திணைக்களமும். தொல்பொருள் திணைக்களமும் இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் முதலாக எத்தகைய அணுகுமுறையை கையாள்கின்றன. பின்பற்றுகின்றன என்பதை நான் சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை. ஆரம்பத்திலே அவர்கள் பழைய இராசதானிகளான அநுராதபுரம். பொலநறுவை. கண்டி. தம்புள்ள போன்றவற்றை தான் பெருமளவில் சிபார்சு செய்தார்கள். இவை அனைத்தும் பௌத்த சமயம் தொடர்பானவை. பொலநறுவையிலும். கண்டியிலும் இந்துக் கோயில்களும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றைப் பற்றி எவரும் பேசுவதில்லை. பொலநறுவையில் உள்ளவை சிவாலயங்களின் அழிபாடுகள் பல இப்பொழுது காணப்படுவதில்லை. முதலாம்சிவாலயம்.இரண்டாம்சிவாலயம்.ஐந்தாம் சிவாலயம் என்பனவே பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக கொள்ளப்படுகின்ற போதிலும் தேடுவாரற்ற நிலையிலே காணப்படுகின்றன. தமிழர்களின் அல்லது இந்துக்களுடைய நிறுவனங்கள் என கொள்ளுவோமாயின் அநுராதபுரம்.பொலநறுவை போன்ற இடங்களைப் போல புராதன கட்டிடங்களின் அடிபாடுகள் குவிந்து காணப்படும் இடங்களில்லை. அவை போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப்பட்டதனால். அவற்றின் அழிபாடுகளின் எச்சங்களும் காணப்படுவதில்லை. முன்னேஸ்வரம். திருகோணமலை அகஸ்தியர் ஸ்தாபனம் போன்ற இடங்களில் யுனெஸ்கோவின் ஆதரவில் பாதுகாப்பை தேடலாம். ஆனால் இவற்றை ஒருவரும் முன்வைக்கவில்லை. முன்வைப்பதானால் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணை வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் கலாசார நிறுவனத்தின் அனுசரணை வேண்டும்.இவற்றை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாது. ஒருமுறை திருக்கேதீஸ்வரம். நகுலேஸ்வரம்.மாவிட்டபுரம். திருக்கோணேஸ்வரம் முதலிய ஆலயங்களின் புராதன சின்னங்களை யுனெஸ்கோ பாதுகாப்பு சின்னங்களான பிரகடனப்படுத்த வேண்டுமென முன்னொரு காலத்திலே இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த ஒரு தமிழர் விரும்பினார். அதற்காக ஒரு கூட்டம் கைலாசபிள்ளையின் வீட்டிலே கூட்டப்பட்டது. தொடக்கத்தில் அவர்கள் என்னை அழைக்கவில்லை. தமிழர் தரப்பில் கூடியவர்கள் என்னை அழைக்கவில்லை. ஆனால் சிங்களவர் தரப்பிலுள்ளவர்கள் பழைய தொல்பொருள் திணைக்களத்தினரும். வேறு சிலரும் வற்புறுத்தியதனால் தான் கூப்பிட்டார்கள். இது ஒரு முக்கியமான விடயம் அங்கு கூடிய தமிழர் எவருக்கும் தொல்லியல் வரலாறு பற்றி அறிவு இல்லை.

காலம் போக இந்தக் கூட்டத்தைக் கூட்டியவர்கள் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள். கலாசார அமைச்சைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய உள்நோக்கமும் வேறாக இருந்தது. அப்படி இவற்றை தொல்லியல் சின்னங்களாக்க வேண்டுமானால். இவற்றுடன் கோட்டைகள். துறைமுகங்கள் ஆகியவற்றையும் சேர்க்க வேண்டுமென்று மறைந்த தொல்லியல் திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளரான றோலன் டி சில்வா சொன்னார். இது ஒரு ஆபத்தான திட்டம். ஏனெனில். கோட்டைகள் என்று சொல்லும் போது இராணுவமயமாகும். இதுபோலவே துறைமுகங்களும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும். எங்கள் ஆலயங்களும் அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் போகும். யுனெஸ்கோ என்று சொன்னாலும் நிர்வாகம் செய்பவர்கள் இங்குள்ளவர்களே. அப்போது தான் எனக்கு புரிந்தது யுனெஸ்கோவின் ஆதரவை நாடுவது ஆபத்தானது.

**கேள்வி –இலங்கையில் தமிழர்களின் பூர்வீக இருப்புத் தொடர்பில் அகழாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய முக்கிய இடங்களாக நீங்கள் எவற்றைப் பார்க்கின்றீர்கள்? இந்த அகழ்வாய்வுகளை வட கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா?**

ஏற்கனவே மாந்தையிலும். கந்தரோடையிலும் அகழாய்வுகளை செய்துள்ளோம். மாந்தையிலே பல தடவைகளாக தொல்பொருளியல் திணைக்களத்தினுடைய அனுசரணையோடு. வெளிநாடுகளைச் சேர்ந்த புலமை மிக்க தொல்லியலாளர்கள் அகழ்வுகளை செய்துள்ளனர். புலமை மிக்கவர்கள் என்று சொல்லுகின்ற போது அவர்கள் பல நாடுகளிலும். பல தலங்களிலே அகழாய்வுகளை செய்திருக்கிறார்கள். ஒப்பியல் நோக்கில் சர்வதேச தொடர்புகள். அக்காலங்களில் நடைபெற்ற சர்வதேச வாணிபம். பொருட் பரிவர்த்தனை முதலியவற்றிலே தான் அவர்களுக்கு கூடுதலான அக்கறையும்.அனுபவமும் உண்டு. அகழ்வு நடைபெறும் பிராந்தியத்தின் வரலாறு.பண்பாடு தொடர்பான ஆழமான புலமை அவர்களிடம் காணப்படவில்லை. அதுமட்டுமன்றி இவர்கள் யுனெஸ்கோ மூலமாக வருவதனாலும் இலங்கை அரசாங்கத்தின் நிறுவனமான தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையோடு அகழ்வுகளை செய்வதாலும். எந்தளவிற்கு வெளிப்படைத் தன்மையை இவற்றிலே காண முடியும் என்பது கேள்விக்குறியானது. ஏனெனில். ஒரு துறை அரசியல்மயமாக்கப்பட்டிக்கின்ற போது. வெளிநாடுகளிலிருந்து பங்கு கொள்பவர்களும் ஏதோவொரு காரணமாக கட்டுப்பாடுகளுள் அடங்க வேண்டிய தேவைகள் இருக்கும் போது வெளிப்படையான கருத்துக்களை நாம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? உதாரணமாக அநுராதபுரத்திலும் திஸமகாராமவிலும் அகழாய்வுகளை நடத்திய வெளிநாட்டவர்கள் அங்கு பானையோடுகளில் உள்ள எழுத்துக்களை பற்றி அறிக்கை வெளியிட்டனர்.

ஆனால் மாந்தையில் அகழாய்வு நடத்தியவர்கள் அதை செய்யத் தவறி விட்டார்கள். அதுவும் சற்று பிந்திய காலத்தில் தான் அது துறைமுகம் சிறப்புப் பெற்றது என்ற காரணத்தினால் பானைகளில். மட்பாண்டங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களின் அறிக்கையில் அது பற்றி ஒரு கதையும் கதைக்கவில்லை. இரண்டாவதாக பல ஆண்டுகளுக்கு முன்பு பல்கலைக்கழக மாணவர்களோடு திருக்கேதீஸ்வரம் சென்ற போது அகழாய்வு நடந்த ஒரு இடத்தை நாங்கள் பார்க்கப் போனோம். அங்கே சில மாணவர்கள் பொறுக்கியெடுத்த தரை மேல் காணப்பட்ட கலவோடுகள் சிலவற்றில் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றை நாங்கள் ஒரு நூலிலும் வெளியிட்டுள்ளோம். அவற்றை வாசிக்கத் தெரிந்தவர்கள் அவற்றை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

இதுபோல கந்தரோடையில் Poul E Peris அகழாய்வு செய்த போது அவரிடம் பிராமி எழுத்துக்களை வாசிக்கும் தன்மையை நாங்கள் எதிர்பார்த்திருக்க முடியாது. பின்பு சென்ற நூற்றாண்டிலே 66ஆம் ஆண்டில் அகழாய்வுகளை நடத்திய போது அவர்கள் எழுத்துக் பொறித்த மட்பாண்டங்கள் குறித்த எதுவித கதையும் இல்லை. ஆனால் அவற்றில் கிடைத்த கலவோடுகள் யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காணப்படுகின்றன. கலவோடுகளிலும்.சுடுமண் கட்டிகளிலும். களிமண் கட்டிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் தமிழ் மொழியில் உள்ளன. தமிழ்ப் பிராமியில் உள்ளன. இதை ஒப்புக் கொள்ளுவதற்கு அங்குள்ளவர்களே தயங்குகின்றனர். அப்பொழுது மற்ற இடங்களில் ஆய்வுகளை செய்தால் என்ன நடக்கும். இன்றைய நிலையில் ஆய்வுகளை செய்தால்.இப்படியான சில குறைகள்.தவறுகள்.மௌனங்கள் காணப்படும்.

**தொடரும்...**

# விளையாட்டு செய்திகள்

## முதல் சுற்றுடன் வெளியேறும் முதல் வரவேற்பு நாடாகிறது கத்தார்

பீபா2022 உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியிலிருந்து வரவேற்பு நாடான கத்தார் முதல் சுற்றுடன் வெளியேறுகிறது. உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தும் நாடு முதல் சுற்றுடன் வெளியேறுவது இதுவே முதல் தடவையாகும்.

குழு ஏ இல் இடம்பெற்றுள்ள கத்தார் அணி தனது முதல் போட்டியில் ஈக்வடோரிடம் 2:0 விகிதத்தில் தோல்வியுற்றது. இதன் மூலம், உலகக்கிண்ண சுற்றுப்போட்டியொன்றை நடத்தி, முதல் போட்டியிலேயே தோல்வியடைந்த அணியாகியது கத்தார். அதன்பின் தனது இரண்டாவது போட்டியில் செனகல் அணியிடம் கத்தார் 3:1 விகிதத்தில் தோல்விற்றது. இதனால் கத்தார் புள்ளிகள் எதனையும் பெறவில்லை.

அதேவேளை, அக்குழுவிலுள்ள நெதர்லாந்தும், ஈக்வடோரும் தலா 4 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளன. செனகல் அணி 3 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இக்குழுவில் ஒவ்வொரு அணிக்கும் தலா ஒரு போட்டி எஞ்சியுள்ளன. நிலையில் கத்தார் அணி முதல் இரு இடங்களில் ஒன்றைப் பெறுவதற்கு வாய்ப்பில்லை. இதனால், உலகக்கிண்ண முதல் சுற்றுடன் கத்தார் வெளியேறவுள்ளது. இதனால், உலக்ககிண்ண சுற்றுப்போட்டியில் முதல் சுற்றுடன் வெளியேறும் முதல் வரவேற்பு நாடாகுகிறது கத்தார்.



## புதிய சாதனை நிகழ்த்திய டாம்

ஒருநாள் கிரிக்கெட்டில் இலக்கை வெற்றிகரமாக விரட்டியபோது அதிக ஓட்டங்கள் எடுத்த நெ.5 பேட்டர் என்கிற சாதனையை நிகழ்த்தியுள்ளார் நியூசிலாந்து வீரர் டாம் லதம். முதல் ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது நியூசிலாந்து அணி. ஆக்லாந்தில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணய சுழற்சியை வென்ற நியூசிலாந்து அணி தலைவர் கேன் வில்லியம்சன், ஃபீல்டிங்கைத் தேர்வு செய்தார்.

இந்திய அணியில் அர்ஷ்தீப் சிங், உம்ரான் மாலிக் ஆகிய இருவரும் ஒருநாள் கிரிக்கெட்டுக்கு அறிமுகமானார்கள். 50 ஓவர்களில் இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 306 ஓட்டங்கள் எடுத்தது. ஷ்ரேயர் ஐயர் 76 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 80 ஓட்டங்களும் ஷிகர் தவன், 77 பந்துகளில் 13 பவுண்டரிகளுடன் 72 ஓட்டங்களும் ப்மன் கில் 50 ஓட்டங்களும் எடுத்தார்கள். வாஷிங்டன் சுந்தர் 16 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். 47.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 309 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது நியூசிலாந்து அணி. டாம் லதம் 145, வில்லியம்சன் 94 ஓட்டங்கள் எடுத்துக் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்கள். இருவரும் 27.2 ஓவர்களில் 221 ஓட்டங்கள் கூட்டணி அமைத்து நியூசிலாந்து அணி ஒருநாள் தொடரில் 1 - 0 என முன்னிலை பெற உதவினார்கள். ஆட்ட நாயகன் விருதை டாம் லதம் வென்றார். 2 வது ஒருநாள் ஆட்டம் ஞாயிறன்று ஹேமில்டனில் நடைபெறவுள்ளது.

ஒருநாள் : இலக்கை வெற்றிகரமாக விரட்டியபோது அதிக ரன்கள் எடுத்த நெ.5 அல்லது அதற்குக் கீழே உள்ள பேட்டர்கள்:

145* டாம் லதம் எள இந்தியா. 2022
135* சிகந்தர் ராஸா எள வங்கதேசம். 2022
127* மைக்கேல் பிரேஸ்வெல் எள அயர்லாந்து. 2022
124* மார்கன் எள அயர்லாந்து. 2013
124. ரிகார்டோ பவல் எள இந்தியா. 1999




## ஆப்கானிஸ்தானிடம் சொந்த மண்ணில் மண்டியிட்டது இலங்கை

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 60 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

கண்டி பல்லேலயில் இடம்பெற்ற முதல் ஒருநாள் 50 ஓவர்கள் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.



ஆப்கானிஸ்தான் அணி சார்பாக சிறப்பாக துடுப்பெடுத்தாடிய இப்ராகிம் சந்ரான் 106 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். மற்றும் குர்பாஸ் 53 ஓட்டங்களையும் ரஹ்மத் ஷா 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இலங்கை அணிசார்பாக வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். 295 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 38 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 60 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இந்த வெற்றியை தொடர்ந்து மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆப்கானிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இலங்கை அணி சார்பில் துடுப்பாட்டத்தில் பெதும் நிசங்க 83 ஓட்டங்களையும் வனிந்து ஹசரங்க 66 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஆப்கானிஸ்தான் அணி சார்பில் பந்துவீச்சில் பஸ்லாஹ் பரூக்கி 4 விக்கெட்டுகளையும் நயீப் 3 விக்கெட்டுகளையும் அஹமட்சயி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி பல்லேகலயில் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

## நெதர்லாந்து – ஈக்வடோர் போட்டி சமநிலையில் முடிந்தது



கத்தார் 2022 உலகக் கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அன்று(25) நடைபெற்ற நெதர்லாந்து, ஈக்வடோர் அணிகளுக்கு இடையிலான போட்டி 1:1 கோல் விகிதத்தில் சமநிலையில் முடிவடைந்தது.

குழு ஏ அணிகளுக்கு இடையிலான இப்போட்டி, கத்தார் தலைநகர் தோஹாவிலுள்ள கலீபா சர்வதேச அரங்கில் நடைபெற்றது.

போட்டியின் 6 ஆவது நிமிடத்தில் நெதர்லாந்து வீரர் கொடி கெப்கோ கோல் புகுத்தினார். கத்தார் 2022 சுற்றுப்போட்டியில் இதுவரை ஆட்டமொன்று ஆரம்பிக்கப்பட்ட மிக சொற்ப வேளையில் வேகமாக அடிக்கப்பட்ட கோல் இதுவாகும்.

எனினும், பின்னர் ஈக்வடோர் அணி நெதர்லாந்துக்கு கடும் சவாலை ஏற்படுத்தியது. அதன்பின் கூடுதலான நேரம் ஈக்வடோர் அணியை பந்தை தம்வசம் வைத்திருந்தது.

இடைவேளைக்கு சற்று முன் ஈக்வடோர் வீரர் பேர்விஸ் எஸ்துபினன் அடித்த பந்து கோல் கம்பத்தக்குள் புகுந்தது. எனினும், ஈக்வடோர் வீரர் ஜக்சன் பொரோஸோ ஓவ் சைட்டில் நின்றிருந்ததால் அந்த கோல் அனுமதிக்கப்படவில்லை.

இடைவேளையின்போது நெதர்லாந்து 1:0 விகிதத்தில் முன்னிலையில் இருந்தது.எனினும் இடைவேளையின் பின்னர் 49 ஆவது நிமிடத்தில் ஈக்வடோர் வீரர் என்னேர் வலன்சியா கோல் புகுத்தி, கோல் எண்ணிக்கையை சமப்படுத்தினார்.

இச்சுற்றுப்போட்டியில் வலன்சியா புகுத்திய 3 ஆவது கோல் இது என்பது குறிப்பிடத்தக்கது. கத்தார் அணியுடனான போட்டியில் அவர் 2 கோல்களை புகுத்தியிருந்தார்.

இறுதியில் நெதர்லாந்து - ஈக்வடோர் போட்டி 1:1 கோல் விகிதத்தில் சமநிலையில் முடிவடைந்தது.



# உலக பார்வை



## ஒரே வழக்கில் 49 பேருக்கு மரண தண்டனை

அல்ஜீரியா நாட்டின் வடக்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பெர்பர் மலைப்பகுதியில் காட்டுத்தீயை ஏற்படுத்திய சந்தேகத்தின் பேரில் ஓவியர் ஜமீல் பென் இஸ்மாயிலைஅடித்துக் கொன்ற 49 பேருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம், வடக்கிழக்கு அல்ஜீரியாவின் பெர்பர் மலைப்பகுதி சுற்றியுள்ள வனப்பகுதியில் காட்டுத்தீ மூண்டது. இதில் சிக்கி தீயணைப்பு வீரர்கள் உள்பட 90 பேர் பலியாகினர்.

இக்காட்டுத்தீயில் சிக்கியவர்களுக்கு உதவும் நோக்கில் 320 கி.மீ பயணித்து கடுமையான பாதிப்புக்குள்ளான லார்பாநாத் இராதேன் பகுதிக்கு வந்தடைந்தார் ஓவியர் பென் இஸ்மாயில். அப்பகுதியைச் சாரதாவர் என்பதால் இஸ்மாயில் தான் தீ வைத்திருக்க கூடும் என்று எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில் கிராமத்தினர் கடுமையாகத் தாக்கியதில் அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக 100-க்கும் மேற்பட்டவர்களை காவல்துறையினர் விசாரித்தனர். தலைநகர் அல்ஜீர்ஸின் புகர் பகுதியான டிரா எல் பெய்டா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்தப் படுகொலை வழக்கில் 49 பேருக்கு மரண தண்டனை அளித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் 38 பேருக்கு 2 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அல்ஜீரியா நாட்டில் மரண தண்டனை நிறைவேற்ற தடை இருப்பதால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆயுள் தண்டனை கைதியாக சிறையிலிருப்பார்கள் என்று கூறப்படுகிறது.

## ஒரே ஆண்டில் 2 லட்சம் பேர் பலி – தொடரும் மரணங்கள்!

ஐரோப்பிய நாடுகளில் 2020ஆம் ஆண்டில் மட்டும் 2 லட்சத்துக்கும் அதிகமானோர் காற்று மாசுபாட்டினால் பலியாகியுள்ளதாக புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன. உலகம் முழுவதும் காற்று மாசுபாடு அச்சுறுத்தும் பிரச்னையாக உருவெடுத்து வருகிறது. காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை உலக நாடுகள் மேற்கொண்டு வருகின்றன.



இந்நிலையில் ஐரோப்பிய சுற்றுச்சூழல் நிறுவனம் காற்று மாசுபாட்டால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான புள்ளி விவரப்பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் 2020 ஆம் ஆண்டில் மட்டும் ஐரோப்பிய நாடுகளில் 2 லட்சத்து 38 ஆயிரம் பேர் காற்று மாசுபாட்டால் ஏற்படும் நோய்களுக்குள்ளாகி பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பேரிடர் காலத்தில் குறைந்த காற்று மாசுபாட்டை சுட்டிக்காட்டியுள்ள தரவுகள் அதற்கு பின்னான காலத்தில் அதன் அளவு வேகமாக அதிகரித்ததாகத் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் ஊரகப் பகுதிகளில் உள்ள 96 சதவிகித மக்கள் காற்று மாசுபாடு சிக்கலை எதிர்கொண்டு வருவதாகவும் எனினும் 2005 முதல் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காற்று மாசுபாட்டால் ஏற்படும் இறப்பு 45 சதவிகிதம் குறைந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளது. இதேநிலை தொடர்ந்தால் 2030 ஆம் ஆண்டுக்குள் பூஜ்ஜிய காற்று மாசுபாடு நிலையை எட்ட முடியும் என ஐரோப்பிய சுற்றுச்சூழல் நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## முச்சக்கர வண்டியில் வேலைக்கு செல்லும் அமெரிக்க பெண் தூதுவர்கள்

இந்தியாவில் டெல்லியில் அமெரிக்க பெண் தூதுவர்கள் குண்டுகள் துளைக்காத கவச காருக்கு பதிலாக முச்சக்கர வண்டியை ஓட்டி வேலைக்குச் செல்கின்றனர். இந்தியாவில் பல்வேறு நாடுகளை சேர்ந்த தூதரகங்கள் உள்ளன. அவற்றில் அந்நாட்டு தூதர்கள் வேலை செய்து வருகின்றனர்.

அமெரிக்காவை சேர்ந்த 4 பெண் தூதுவர்கள் டெல்லியில் உள்ள தூதரகத்தில் வேலை செய்து வருகின்றனர். ஆனால், அவர்கள் துப்பாக்கி குண்டுகள் துளைக்காத கவச வாகனங்களில் செல்வதற்கு பதிலாக முச்சக்கர வண்டியில் பயணம் செய்வதிலேயே விருப்பம் கொண்டுள்ளனர். இதற்காக தனியாக முச்சக்கர வண்டியை வாங்கி வைத்துள்ளனர். அவற்றிலேயே 4 தூதுவர்களும் பணிக்கு செல்கின்றனர்.

இதுதவிர, பணி நிமித்தம் எங்கேனும் செல்ல வேண்டுமென்றாலும் அவர்கள் கருப்பு மற்றும் பிங்க் வண்ணம் கொண்ட முச்சக்கர வண்டியிலேயே பயணம் மேற்கொள்கின்றனர். அவர்களே முச்சக்கர வண்டியை ஓட்டியும் செல்கின்றனர். அப்படி என்ன அதில் விருப்பம் உள்ளது என்பதற்கு அவர்களே விளக்கமும் அளித்துள்ளனர். அது, வெளியே போகும்போது, சுதந்திரம் ஆக பயணிக்கும் உணர்வை ஏற்படுத்துகிறது என தெரிவிக்கின்றனர்.



## பிரேசிலில் இரண்டு பாடசாலைகள் மீது துப்பாக்கி சூடு

பிரேசில் நாட்டில் இராணுவ உடையில் ஆயுதமேந்திய நபர் 2 பாடசாலைகளில் நடத்திய துப்பாக்கி சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளதோட, 11 பேர் காயமடைந்தனர். பிரேசில் நாட்டின் எஸ்பிரிடோ சான்டோ மாகாணத்தில், தலைநகர் விடோரியாவில் இருந்து 50 மைல்கள் வடக்கே அராகுரூஸ் என்ற சிறிய நகரில் ராணுவ உடை மற்றும் முகமூடி அணிந்து வந்த மர்ம நபர் ஒருவர் இரண்டு பாடசாலைகளில் திடீரென புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தி உள்ளார்.



இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்து உள்ளனர். இதனை மாகாண கவர்னர் ரெனேட்டோ காசாகிராண்ட் உறுதிப்படுத்தி உள்ளார். அராகுரூசில் உள்ள 2 பள்ளி கூடங்களில் கோழைத்தன தாக்குதல் நடந்துள்ளது.

இதில் உயிரிழந்தவர்களின் நினைவாக 3 நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும். தொடர்ந்து விசாரணை நடத்தி, விரைவில் புதிய விவரங்கள் வெளியிடப்படும் என தெரிவித்து உள்ளார். எனினும், தாக்குதல் நடத்திய நபருக்கு 16 வயது இருக்க கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த இரட்டை தாக்குதலுக்கு பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா இரங்கல் தெரிவித்துள்ளார்.

## சீனாவில் அடுக்குமாடி குடியிருப்பில் பாரிய தீ விபத்து - 10 பேர் பலி

சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர். சீனாவின் வடமேற்கில் உள்ள சின்ஜியாங் மாகாணத்தின் உரும்கி நகரில் 21 மாடிகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு படையினர் 3 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.



இந்த தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 9 பேர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளனர். தீ விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், விபத்து குறித்து உயர்மட்ட விசாரணை நடத்தி வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கொரோனாவுக்குப் பின் பக்கவாதம் ஏற்படுவது அதிகரிப்பு!

அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஒரு சிறிய ஆய்வின்படி, கொரோனா தொற்றுக்குப் பிறகு குழந்தைகளுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகமாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது. பீடியாட்ரிக் நியூராலஜி இதழில் இந்த வாரம் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி கட்டுரையில், மார்ச் 2020 மற்றும் ஜூன் 2021 க்கு இடையில் இஸ்கிமிக் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட 16 நோயாளிகளின் மருத்துவ குறியீடுகளை கொண்டு அவர்களை அடையாளம் கண்டு கொண்டனர். ஒட்டுமொத்தமாக, குழந்தைகளுக்கு பக்கவாதம் வந்தால் ஒப்பீட்டளவில் குறைந்த ஆபத்து உள்ளது என்ற நிலையில், கோவிட்-19 பிறகு இந்த பாதிப்பு உண்மையாக மாறியுள்ளது என்று உட்டா ஹெல்த் பல்கலைக்கழகத்தில் குழந்தை நரம்பியல் ஆய்வின் முதன்மை ஆசிரியர் தெரிவித்தார். அதே வேளையில், கடந்த ஐந்து ஆண்டுகளில், பக்கவாதம் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு சராசரியாக 4 ஆக இருந்தது.



2021ஆம் ஆண்டு குழந்தைகள் பற்றிய சர்வதேச ஆய்வு முடிவுகளின் படி தொற்று பாதித்த குழந்தைகளுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரிக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. இந்த கூற்று சர்வதேச ஆய்வின் கண்டுபிடிப்புகளுக்கு முரணாக உள்ளனது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆய்வில் எடுத்து கொண்ட 16 குழந்தைகளில், பெரும்பாலான குழந்தைகள் மருத்துவமனையை விட்டு வெளியேறும் போது பக்கவாதத்தால் பாதிப்புக்குள்ளாகினர். இந்நிலையில், பக்கவாதத்தின் அறிகுறிகளை முன்கூட்டியே ஆய்வு செய்யம் அவசியத்தை இந்த புதிய ஆய்வு எடுத்துறைத்துள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மின்வெட்டால் உக்ரேனில் 60 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பாதிப்பு

உக்ரேனில் பல பகுதிகளில் மிகப்பெரிய அளவில் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது. உக்ரேனில் உள்ள மின் நிலையங்களை குறி வைத்து ரஷ்ய இராணுவம் தாக்கியது. கடந்த சில நாட்களாக உக்ரேனின் முக்கியமான உள்கட்டமைப்பைத் தாக்க ரஷ்யா டிரோன்கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தி வருகின்றது.

உக்ரேன் மின் நிலையங்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியை ரஷ்யா அழித்துள்ளது. இதனால் உக்ரேனில் பல பகுதிகளில் மிகப்பெரிய அளவில் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் 60 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இன்னும் மின்வெட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்தார். பெரும்பாலான பகுதிகளில் (உக்ரேனின்) மற்றும் கீவ்வில் இருட்டடிப்பு தொடர்கிறது. மொத்தத்தில், 60 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மின்வெட்டால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது பாதியாக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



















வவுனியாவில் இயங்கி வரும்
பிரபல்யமான வாராந்த பத்திரிகை
நிறுவனத்திற்கு விளம்பர
முகாமையாளர்கள் மற்றும் பத்திரிகை
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
தேவை ஆண்,பெண் இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்

thinappuyal2014@gmail.com

தொடர்புகளுக்கு : 077 6906182 , 0773142763







இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 27.11.2022 அன்று வெளியிடப்பட்டது.